

# தமிழரசு

**16—11—1976**

**மலர் : 7　　　இதழ் : 10**

## இந்த இதழில்...


| | பக்க எண் |
|---|---|
| அன்புருவாம் எங்கள் ஜவஹர் ... | 2 |
| நேருவே போற்றி ... ... | 3 |
| குழந்தைகளைச் செம்மையாக வளர்க்க வேண்டும் ... ... | 4 |
| நேருவின் வாழ்க்கைக் குறிப்புகள் ... | 6 |
| தேசிய ஒருமைப்பாடே நம் உயிர் மூச்சாகும்! ... | 9 |
| உலக அமைதிக்குப் பாடுபட்ட உத்தமர் | 11 |
| தீண்டாமை எனும் பெரும்பாவம் ... | 26 |
| சாதி முறை நீடித்திருக்கும் வரை நமக்கு விடிவுகாலமே இல்லை ... | 28 |
| குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955 ... | 30 |
| கவிஞர் போற்றும் சிதம்பரனர்! ... | 34 |
| கோவையில் என் தந்தை ... | 37 |
| தென்னுட்டுத் திலகர் ... | 41 |
| தேசபக்தர் சிதம்பரனர் ... | 45 |
| வ. உ. சிதம்பரனரின் பெருமை ... | 46 |
| நேருவின் உயில் ... ... | 47 |


**அட்டைப்பட விளக்கம்:**

தமிழகக் குழந்தைகளுடன் நேரு.



# அன்புருவாம் எங்கள் ஜவஹர்!

நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை




மன்னுயிரைப் போர்க்களத்தில் கொன்று வீழ்த்தி
மலைமலையாய்ப் பிணக்குவியல் குவித்த தாலே
மன்னரெனப் பலர்வணங்கத் தருக்கி வாழ்ந்தோர்
மாநிலத்தில் எத்தனையோ பேரைக் கண்டோம்!
தன்னுயிரை மன்னுயிர்க்காய்த் தத்தம் செய்து
தருமநெறி தவறாத தன்மைக் காக
இன்னுயிர்கள் மனங்குளிர இளங்கோ என்றே
எதிர்கொள்ளும் மன்னனெங்கள் ஜவஹர் லாலே!

சேனைகளை முன்செலுத்திப் பின்னால் நின்று
'ஜெயித்து விட்டேன்' என்றுசொல்லிச் செருக்கி வாழும்
ஊனமுள்ள பெருமையினால் அரச ரென்போர்
உலகத்தில் எத்தனையோ பேரைக் கண்டோம்!
தீனர்களின் துயர்துடைக்க முன்னால் நின்று
தீரமுடன் பிறர்க்குழைக்கும் சிறப்புக் காக
மானமிகும் வீரரென எவரும் வாழ்த்த
மன்னனென விளங்கிடுவான் ஜவஹர் லாலே!



ஆயுதத்தின் அதிகாரம் அதற்கே அஞ்சி
அடிபரவும் பலபேர்கள் அருகே சூழப்
பேயுதித்துக் கொலுவிருக்கும் பெற்றி யேபோல்
பிறர்நடுங்க அரசாண்டார் பலபேர் உண்டு;
போயுதித்த இடங்களெல்லாம் புதுமை பூட்டிப்
புதையல்வந்து கிடைத்ததுபோல் பூரிப் பெய்தி
தாயெதிர்ந்த குழந்தைகள்போல் ஜனங்கள் பார்க்கத்
தாவிவரும் மன்னனெங்கள் ஜவஹர் லாலே!

ஏழைகளின் குடிமுழுக வரிகள் வாங்கி
இந்திரியச் சொந்தசுகங் களுக்கே வீசிக்
கோழையராய்ப் பிறர்உழைப்பில் கோலங் கொள்ளும்
கோமான்கள் குவலயத்தில் பலபேர் உண்டு;
வாழையைப்போல் பிறர்க்குதவி வருத்தம் தாங்கி
வறியவர்க்கே கனிந்துருகும் வரிசைக் காக
வாழிஜவார் வாழிஜவார் வாழி யென்று
வாழ்த்திசைக்கும் மன்னனெங்கள் ஜவஹர் லாலே!



# நேருவே போற்றி!

சுத்தானந்த பாரதியார்



இந்தியா வுள்ள மட்டும்
இமாலயம் உள்ள மட்டும்
சொந்தநா டினிது பெற்ற
சுதந்திரம் உள்ள மட்டும்
எந்தையாம் காந்தி நாமம்
இலகிடு மட்டும்; எங்கள்
சிந்தையிற் கோயில் கொண்டாய்
ஜெவஹரே ஜெய முனக்கே!


முத்திலே பூத்த வைரம்
மோகன காந்தி ரத்னம்
புத்தரின் கருணை யுள்ளம்
புதுயுகச் சிற்பி எம்மான்
சத்தியக் கொடிபி டித்து
சகமெலாம் ஒருமை சேர
நித்தியம் பாடு பட்ட
நேருவை நினையார் யாரே?

அச்சத்தைப் போக்கும் பார்வை
ஆண்மையை ஊக்கும் செஞ்சொல்
வச்சிரம் போன்ற மேனி
மனத்தினை அள்ளும் அன்பு
மெச்சிடக் கிழக்கும் மேற்கும்
வீறுகொள் சாந்த சேவை
உச்சிவா னத்தில் வந்த
உதயதா ரகையே வாழ்க!

வேருயர் நீரைப் போலே
விடுதலைக் கொடித ழைத்துப்
பாருயர் நன்மை யோங்கப்
பருவமா மழையே போன்றாய்
மேருயர் சீர்த்தி பெற்றாய்;
மேதினி முழுதும் வாழ
நேருயர் அமைதி தந்த
நேருவே போற்றி! போற்றி!



வானதி பதிப்பகத்தின்
'கவிஞர் நெஞ்சில் நேரு'
என்னும் நூலிலிருந்து.



# குழந்தைகளைச் செம்மையாக வளர்க்க வேண்டும்

—ஜவஹர்லால் நேரு

"இந்த நாட்டிலுள்ள குழந்தைகள் அனைவரும், நல்ல முறையில் வளர்த்து வரப்படுகிறார்களா என்று கவனித்துக் கொள்வதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு என்று நான் கருதுகிறேன். ஏனெனில், குழந்தைகள் இந்த நாட்டின் செல்வம். இந்தச் செல்வத்தை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளுகிறோம் என்பதைப் பொறுத்துத்தான், இந்தியாவின் எதிர்காலம் அமைந்திருக்கிறது.

"உலக முழுவதிலும் உள்ள குழந்தைகளின் நினைவு எனக்கு வருகிறது. அவர்களிடம் பல விதங்களில் வெளிப்படையான மாறுதலைக் கண்டேன். பேசும் மொழிகள் எத்தனை! உடுத்தியிருந்த உடைகள்தான் எத்தனை விதம்! ஆனால் அவர்கள் அழகு முகங்களிலே காணப்பட்ட உணர்ச்சி, அதனால் தோன்றும் கவர்ச்சி, உலக முழுவதிலும் ஒன்றாகவே இருப்பதைக் கண்டேன். அவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தால், அவர்கள் விளையாடவோ, சண்டை போடவோ செய்வார்கள்.

"அவர்கள் சண்டை போட்டுக் கொள்வதும் ஒரு விளையாட்டுத்தான். தங்களுக்குள்ளே இன, நிற, சாதி, மத வேற்றுமைகளை அவர்கள் பார்ப்பதில்லை. அவர்களுடைய தாய் தந்தையரைவிடப் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். "துரதிருஷ்டவசமாக பெரியவர்களாக ஆகும்போது அவர்களுடைய இயற்கை அறிவை, பெரியவர்களின் போதனைகளும், நடத்தையும் மறைத்துவிடுகிகின்றன

"ஆம், வயது வளர வளரத்தான் அவர்களுடைய உள்ளம் கறைப்படுகிறது என்று சொல்வதைவிட, கறைப்படுத்தப்படுகிறது என்றுதான் கூறவேண்டும்.


"குழந்தைகளின் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு அறிவு போதித்து அறிவாளிகளாக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். என்னைக் கேட்டால் அவர்கள் குழந்தைகளை அதனதன் போக்கில் வளரவிட்டால் குழந்தைகள் தாங்களாகவே புத்திசாலிகளாக—அறிவாளிகளாக—விளங்குவார்கள்.

"உலகத்தின் பல விஷயங்களைக் குழந்தைகள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியந்தான். ஆனால் அவர்கள் தாங்களாகவே அவற்றைப் புரிந்து கொள்ள, நாம் வசதி வாய்ப்புக்கள் செய்து தரவேண்டும். நாமாக நமது மனப் போக்கின்படி உலக விஷயங்கள் பற்றிய ஞானத்தை அவர்கள் மூளையிலே திணிக்க முயற்சியெடுக்கக் கூடாது.

"குழந்தைகள் செம்மையாக வளருவதற்கு வகை செய்வதுதான் நமது நாட்டின் ஒவ்வொரு அரசியல் கட்சிகளின் இலட்சியமாகத் திகழ வேண்டும். சொல்லப்போனால் இதுதான் முழுமுதல் கொள்கையாக இருக்க வேண்டும்."

(இது ஒரு தொகுப்பு)


# ஓயாது உழைத்தவர்



செல்வத்தில் பிறந்தவர்; செல்வமாக வளர்ந்தவர்; செல்வத்தை ஈட்டுவதற்கு ஏற்ற கல்வியும் திறனும் ஒருங்கே அமைந்தவர். ஆனல், ஆங்கிலேயரின் அடிமை நாடாக இருந்த இந்தியாவில், அவர் பொருள் தேடி உயிர் வாழ விரும்பவில்லை. வழக்கறிஞராய் வாழ்வை நடத்த அவர் மனம் இசையவில்லை. எனவே, நாட்டின் விடுதலைக்கென்று இரவு பகலாக உழைத்தார். காந்தியடிகளின் தலைமையில் நடந்த அறப்போராட்டங்களில் பல முறை சிறை சென்றார். சிறையில்கூட அவர் ஓய்ந்திருக்கவில்லை. உலகம் புகழும் ஒப்பற்ற நூல்களை சிறையில் அவர் எழுதினர். பாரத நாட்டின் பிரதம மந்திரியாக ஆன பின்பும் ஒவ்வொரு நாளும் பதினெட்டு மணி நேரத்திற்கு மேல் ஓயாது உழைத்தார்.

இவ்வாறு, ஓய்வின்றி உழைத்ததன் காரணத்தினை அவர் கையினல் எழுதி வைத்திருந்த ஆங்கிலக் கவிதை நமக்கு உணர்த்துகிறது. அமெரிக்கக் கவிஞர் ராபர்ட் ஃப்ராஸ்டு ( Robert Frost ) என்பவர் இயற்றிய இக் கவிதையை ஒரு காகிதத்தில் எழுதித் தம் மேசைமீது நேரு வைத்திருந்தார்! அந்தக் கவிதை, கருமவீரர் நேருவின் உள்ளத்தை நன்கு உணர்த்துவதாக அமைந்திருக்கிறது! ''கண் துஞ்சார் கருமமே கண்ணுயினர்'' என்ற வார்த்தைகளை நமக்கு நினைவுபடுத்துகிறது.

1964-ல் புவனேசுவர் காங்கிரஸ் மகாநாட்டில் அவர் மயக்கமுற்று விழுந்தார். அவர் கை கால்களும் விழுந்தன. நான்கு மாதங்கள் இந்திரா காந்தி அவர்கள் தந்தையைக் கண்ணிமைபோல் காத்தார்; வைத்தியர்களின் கட்டளைகளுக்குப் பணியுமாறு தந்தையை அன்புடன் கடிந்தார், நாட்டு நடப்புக்களை எடுத்துக் கூறி.வந்தார். மே மாதத்தில் அவர் நன்ருகத் தேறிவிட்டதாகத் தோன்றியது. அலுவலகக் கடிதங்களையும் 'பைல்'களையும் கூடப் பார்த்தார். மே மாதம் 26-ஆம் தேதி இரவு எல்லாப் 'பைல்'களையும் பார்த்து முடித்துவிட்டு, 'எல்லா வேலைகளையும் முடித்து விட்டேன் என்று நினைக்கிறேன்'' என்று கூறி விட்டுப் படுக்கச் சென்ருர். அதிகாலையில் மீண்டும் அவர் மயக்க முற்ருர். பின்னர் அவருக்கு நினைவே திரும்பவில்லை. அவர் அருகில் அன்புமிக்க மகள் இருந்தார். மேஜையில் நேருஜி, தம் கையால் எழுதிய ராபர்ட் ஃப்ராஸ்ட்டின் கவிதை ஒன்று இருந்தது. அதன் புகைப்படம் கீழே வெளியிடப்பட்டுள்ளது.




அக்கவிதையின் பொருள்:

வனப்பு மிக்க சோலைதான், வளமுமிக்க சோலைதான்!

எனக்கு உற்ற கடமைகள் எத்தனையோ இருப்பதால்

காதம் பலவும் கடந்துதான் கண்ணயர முடியும் நான்


காதம் பலவும் கடந்துதான் கண்ணயர முடியும் நான்!

இக்கவிதையை நினைவுகொண்டு, நாம் ஒவ்வொருவரும் கடமையைச் செய்தால் நாடு முன்னேறும் என்பது திண்ணம்!

## நேருவைப்பற்றி அண்ணல்

''ஜவர்ஹர்லால் நேரு படிகக் கல்லைப் போலத் தூய்மையானவர். ஐயப்பட முடியாத அளவு உண்மையானவர். அச்சமும் பழிப்புமற்ற வீரர் அவர். நாடு அவர் கைகளில் நலமுடன் இருக்கும்.''

—மகாத்மா காந்தி


# நேருவின் வாழ்க்கைக் குறிப்புகள்



1889 நவம்பர்த் திங்கள், 14ஆம் நாள் மோதிலால் நேருவுக்கும் சொரூப ராணிக்கும் அலகாபாத்தில் பிறந்தார்.

1905 மே திங்களில் இங்கிலாந்தில் ஹாரோ பள்ளியில் சேர்ந்தார்.

1910 பட்டப் படிப்பை முடித்து, சட்டப் படிப்பைத் தொடர்ந்தார்.

1912 வழக்கறிஞராகி இந்தியா திரும்பினார். பங்கிபூர் காங்கிரசில் பார்வையாளராகக் கலந்து கொண்டார்.

1915 காங்கிரசின் சார்பில் முதன் முறையாக மேடை ஏறிப் பேசினார்.

1916 பிப்ரவரி 8-ல், கமலாவை மணந்தார். டிசம்பரில் காந்தியடிகளுடன் முதல் சந்திப்பு.

1917 நவம்பர் 19-ல், ஒரே மகளான இந்திரா பிறந்தார்.

1919 மோதிலாலுடன் சேர்ந்து 'இண்டிபெண்டன்ட்' என்ற செய்தி இதழைத்தொடங்கினார்.

1921 கிசான் கிளர்ச்சியில் ஈடுபட்டார்; வேல்ஸ் இளவரசர் வருகையின்போது கடையடைப்பு நடத்தத் திட்டமிட்டதற்காக, டிசம்பர் 6-ல் கைது செய்யப்பெற்று, ஆறு மாதச் சிறைத்தண்டனை அடைந்தார்.

1925 அலகாபாத் நகராட்சித் தலைவரானார். பின்னர் அப்பதவியைத் துறந்தார்.

1927 நவம்பரில், மாஸ்கோவில் நடைபெற்ற ருசியப் புரட்சியின் 10-ஆம் ஆண்டுவிழாவில் கலந்து கொண்டார். 'சோவியத் ருஷ்யா' என்ற நூலை எழுதினார். டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற 42-வது காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.

1930 ஏப்ரல் 14-ல், உப்புச்சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதனால், ஆறு மாதச் சிறைத் தண்டனை பெற்றார்.

1931 பிப்ரவரி 6-ல் மோதிலால் மறைவு.

1934 ஜனவரி 1-ல் மகளுக்கு, கடிதங்கள் வாயிலாக 'உலக வரலாறு' என்னும் நூலை எழுதி முடித்தார்.

1935 பிப்ரவரி 14-ல், 'தன் வரலாற்றை' எழுதினார். செப்டம்பர் 4-ல் மனைவி மிகவும் உடல் நலம் குன்றியதால், அவரைப் பார்ப்பதற்காக, விடுதலை பெற்று, ஐரோப்பா சென்றார். வெளிநாட்டிலிருக்கும் போதே காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

1936 பிப்ரவரி 28-ல் கமலா சுவிட்சர்லாந்தில் காலமானார். ஜூன் 2-ல் இந்திய அரசியல் சட்டத்தின் மாதிரிப் படியை உருவாக்கினார்.

1938 நேருவின் தாயார் சொரூபராணி மறைவு.

1939 சுபாஷ் சந்திர போஸுக்கும் காந்தியடிகளுக்கும் இடையில் எழுந்த வேறுபாட்டைப் போக்க முயன்றார்.

1940 'இந்தியரைக் கேட்காமலே உலகப் போரில் இந்தியா கலந்து கொள்ளும்' என்று ஆங்கில அரசு அறிவித்ததனால் எழுந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டமைக்காக அக்டோபர் 31-ல் கைது செய்யப்பெற்று, இரண்டாண்டு சிறைத் தண்டனை விதிக்கப் பெற்றார்.

1941 டிசம்பரில், விடுதலை பெற்றார்.

1942 ஜனவரி 1-ல், 'நேருவே என் வாரிசு' என்று காந்தியடிகளால் புகழ் மாலை சூட்டப் பெற்றார்.

ஆகஸ்ட் 7-ல் பம்பாய் காங்கிரஸில் 'வெள்ளையனே வெளியேறு' என்னும்

தீர்மானத்தை நிறைவேற்றியதனால், ஆகஸ்ட் 8-ல் கைதானார். நீண்ட காலம் சிறைவாசம் பெற்றார்.

1944 ஏப்ரல் 13-ல், 'இந்தியாவின் கண்டு பிடிப்பு' என்ற நூலை, சிறையிலே எழுதத் தொடங்கி, செப்டம்பரில் முடித்தார்.

1945 ஜூலை 17-ல், முஸ்லீம் லீக் கேட்ட பாகிஸ்தான் பிரிவினையை வன்மையாகக் கண்டித்தார். பொதுத் தேர்தலில் ஈடு பட்ட காங்கிரசுக்கு முழு மூச்சுடன் தொண்டு செய்தார்.

1946 மார்ச் திங்களில், 'இந்தியாவின் கண்டு பிடிப்பு' நூலை வெளியிட்டார். ஆகஸ்ட் 12-ல், இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு, வைஸ்ராய், நேருவிடம் கேட்க, அவர் ஒப்புக் கொண்டார்.

1947 ஆகஸ்ட் 15-ல் இந்தியா சுதந்திரம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரானார்.

1948 ஜனவரி 30-ல், காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்; நேரு கண்கலங்கினார். வானொலியில் உருக்கமாக உரையாற்றினார்.
ஆகஸ்ட் 20-ல் அணுசக்திக் குழுவின் முதற் கூட்டத்தைத் துவக்கினார்.

1950 ஜனவரி 26-ல், இந்தியா குடியரசு நாடு ஆகியது.

மார்ச் திங்களில், இந்தியத் திட்டக் குழுவைத் தொடங்கினார். ஜூலை 14-ல் கொரியாப் போரை நிறுத்தச் சொல்லி மூன்று வல்லரசுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

1954 ஜூன் 25-ல், சீனப் பிரதமர் சூ-என்-லாயை வரவேற்றார். பஞ்சசீலம் என்னும் ஐந்து கொள்கைகளை விளக்கினார்.

1955 ஜூலை 15-ல், 'பாரத ரத்னா' விருது பெற்றார்.

1957 ஜனவரி 12-ல், நாளந்தாவில் புத்தரின் 2,500-வது ஆண்டு விழாவில் பங்கேற்றார்.

1962 டிசம்பர் திங்களில், கோவா மக்களை போர்ச்சுக்கீசியரின் பிடியிலிருந்து விடுதலை பெறச் செய்தார்.

1964 ஜனவரியில், புவனேஸ்வரத்தில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றபொழுது நோய்வாய்ப்பட்டார். சிகிச்சைக்குப் பின் நலம் பெற்றார்.

மே 27. புதன் கிழமை காலை 6.20 மணிக்கு மீண்டும் நோய்வாய்ப்பட்டார். குருதிக் குழலில் கோளாறு ஏற்பட்டதனால், பகல் 2.00 மணிக்கு உயிர் துறந்தார்.

# பெண்களும் கல்வியும்

—ஜவஹர்லால் நேரு

பெண்கள் கல்விப் பயிற்சிபெற வேண்டுமென்ற ஆவல் இன்று சமுதாயத்தில் பெருகியிருக்கிறது. இந்த விழிப்புணர்ச்சி வரவேற்கத் தக்கதாகும்.

சமுதாயத்தில் பெண்கள் பெறும் கல்வியின் பயன், அவர்கள் குடும்பத்தோடு நின்றுவிடாமல் சமுதாய முழுமைக்கும் பயன்படுகிறது. ஒரு குடும்பத்தை மிகச் சிறந்த முறையில் வைத்துக் கொள்வதே உயர்ந்ததொரு சமுதாயப் பணியாயிற்றே! அந்தப் பணியை ஒழுங்குறச் செய்பவள் பெண்ணல்லவா! அவள் மனத்தெளிவுடன் செயற்பட வேண்டியது அவசியமல்லவா! அந்த மனத்தெளிவை அளிப்பது கல்வி என்பதில் இரண்டு கருத்துக்கள் ஏது!

பெண் கல்வி என்று சொல்லும்போது ஒரு விஷயத்தை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பெண்கள் இன்று பெரும்பாலும் ஏதாவது உத்தியோகம் பெறும் நோக்கத்தில் தான் கல்விப் பயிற்சியை விரும்புகிறார்கள். இது தவறு என்றோ, குற்றம் என்றோ நான் கூறவில்லை. ஆனால் இது மட்டுமே கல்வியின் இலட்சணமாகி விடக்கூடாது.

ஒவ்வொரு பெண்ணும் பொது அறிவு ஞானம் பெற்று விளங்க வேண்டும். நாட்டின் சூழ்நிலையைத் தெளிவுறப் புரிந்து கொள்ளும் சக்தியைப் பெறவேண்டும். உலகம் எப்படிப் போகிறது, உலகத்தில் தோன்றும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் என்ன என்பதையெல்லாம் கூர்ந்து நோக்கிப் புரிந்து வைத்துக் கொள்ளும் கூர்மதி வேண்டும்.

இந்தக் காலத்தில் உலகத்தின் எந்த மூலையிலும் ஒதுங்கி வாழ்ந்துவிட முடியாது. உலகத்தில் எங்கோ ஓர் இடத்தில் நடக்கும் ஒரு காரியம், மறுகோடியில் உள்ள சாமானிய மனிதர்களையும் பாதிக்கும் அளவுக்கு விவகாரம் பெருகிவிட்டது.

இந்த நிலையில் வெளி உலகத்தைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல் தங்கள் குடும்பத்தோடு, வீட்டோடு முடங்கிக் கிடந்து வாழ்ந்துவிட முடியாது. ஆகவேதான் ஆண்களைவிட, பெண்களுக்கு வெளி உலகத்தைப் பற்றிய சரியான ஞானம் இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

இந்தியப் பெண்கள் பொதுநலத் தொண்டில் பெருவாரியாக ஈடுபடுவதில்லை என்று ஒரு குறை சொல்வார்கள். இந்தக் குறைக்கு அடிப்படையே, அடுத்த வீட்டைப் பற்றி அக்கறை கொள்ளாது தங்கள் வீட்டோடு முடங்கிக் கிடக்கும் நம் பெண்களின் பண்புதான்!

ஆகவேதான் வெறும் உத்தியோக நோக்கத்தோடு, கல்வி பயிலுவதோடு நின்றுவிடாமல் அறிவு வளர்ச்சி நோக்கத்தோடும் நம் பெண்கள் கல்வி பயில முற்பட வேண்டுவது அவசியம்.

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

*ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.*

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

*ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.*


*உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறாதவர்க்கும் அளிக்கப்படும்.*

*விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.

# தேசிய ஒருமைப்பாடே நம் உயிர் மூச்சாகும்!

—ஜவஹர்லால் நேரு



நம்முடைய தேசத்தின் ஒற்றுமைக்கு, ஐக்கியத்துக்கு இடையூறு செய்து அதைப் பலவீனப்படுத்தும் செயலைச் செய்வது, பாரத சமுதாயத்தினால் மன்னிக்க முடியாததொரு கொடுஞ்செயல் என்றே நான் விளக்க முற்படுகிறேன்.

**பாரத ஐக்கியம் இந்தியர் ஒவ்வொருவரின் உயிர் மூச்சாகும்.** பாரத ஐக்கியத்தைச் சிதைக்க எண்ணும் எந்தவொரு ஆணும், பெண்ணும் தற்கொலை செய்து கொள்ள முயலுகிறார் என்றுதான் அர்த்தம். தற்கொலை முயற்சியிலீடுபடும் எவனையும், மனிதத் தன்மையிலிருந்து கீழிறங்கியவன் என்றுதான் நான் கருதுகிறேன்.

தேச ஐக்கியத்துக்கு ஊறு செய்பவர்கள் என்று நான் குறிப்பிடும்போது, வெறும் பிரிவினைவாதிகளை மட்டுமே நான் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. வகுப்பு வாதம், மாகாணத்துப் பித்து, சாதி வெறி, ஆகியவையும் தேச ஐக்கியத்தின் எதிர்ச் சக்திகள் என்று நான் கூறுகிறேன். மொழிப் பிரச்சினைகளைப் பிரமாதப்படுத்திக் கூச்சலிடுவதைக்கூட, முற்றிலும் சரியான முறை என்று நான் ஒப்புக் கொள்ளவில்லை.

திண்மையும், தீரமும் வாய்ந்ததாக நம்முடைய தேசிய சமுதாயம் இருக்க வேண்டும். அதன் மக்கள், சகோதர பாவத்துடனும், ஐக்கிய உணர்வுடனும் இணைந்திருக்க வேண்டும். ஒரு தேசிய சமுதாயத்துக்கு ஆக்கம் அளிக்கின்ற மனோபாவ ரீதியான, இதயப் பூர்வமான, ஆன்மீக ரீதியான ஐக்கியத்தை உருவாக்குவதுதான் ஜீவாதாரமான செயல் முறையாகும்.

உணர்ச்சி பூர்வமான ஒருமைப்பாடு நமக்குத் தேவை. லோகாயுத ரீதியில் நாம் முன்னேற்றம் காணலாம். ஆனால், மனவேறுபாடற்று ஒத்துவாழவும், ஒத்துழைக்கவும் நம்மால் முடியாவிட்டால் இந்த முன்னேற்றத்தின் பயனெல்லாம் வியர்த்தமாகத்தான் முடியும்.

'நமது சமுதாயம்' என்று பெருமையுடன் நாம் கூறிக்கொள்வதெல்லாம் பாரத சமுதாயத்தைப் பற்றியதாகத்தான் இருக்க வேண்டும். நமது நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் இதனுள் அடக்கம்.

இந்தியாவில் ஏராளமான மதங்கள் இருந்தன; இருக்கின்றன, இந்தியாவின் ஒவ்வொரு மதத்திற்கும் தனிச் சிறப்புகள் உண்டு என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். இந்திய மதங்கள் எல்லாமே நம்முடைய மரியாதைக்கு உரியவைதான்.

நாம் சொந்த வாழ்வில் எந்த மதத்தை வேண்டுமானாலும் பின்பற்றலாம். எந்தவிதத் தடங்கலும் இல்லை. ஆனால் நம் எல்லோருக்குமாகச் சேர்ந்து 'பொது மதம்' ஒன்று இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்த மதத்தை 'இந்திய மதம்' என்று அழைப்போமே!

இந்த மதத்தின் அடிப்படை ஒன்றே ஒன்றுதான்! பாரத சமுதாயத்தைச் சேர்ந்த எல்லோருக்கும் உடல் வெவ்வேறாக இருந்தாலும், உயிரும், உணர்ச்சியும் ஒன்று என்பதுதான் இந்த மதத்தின் தத்துவம்.

நீங்கள் எந்தக் காரியத்தைத் தொடங்குவதாக இருந்தாலும் தொடங்குவதற்கு முன்னால் அதன் மூலம் ஒற்றுமை ஏற்படுமா பிளவு ஏற்படுமா என்று உங்களையே கேட்டுக்கொள்ள வேண்டும். உங்களுடைய செயல்களையெல்லாம் மதிப்பிடுவதற்கான உரைகல் இதுவே.

**மக்களை ஒன்று சேர்க்கின்ற காரியங்கள் எல்லாம் நல்லவை; மக்களைப் பிரித்து வைக்கும் காரியங்கள் எல்லாம் கெட்டவை.**

கட்டுப்பாடும், ஐக்கியமுமே நமது தேசத்திற்கு முதலில் தேவை. ஒன்றாக அடியெடுத்து வைக்கும் ராணுவக் கட்டுப்பாட்டை நான் குறிப்பிடவில்லை; இதயபூர்வமான, மனப்பூர்வமான கட்டுப்பாடும், ஐக்கியமுமே தேவை.

# கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும் காஞ்சிபுரம் பட்டுச் சேலை தங்கத்துக்கு நிகரானது!

ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள். அசல் சரிகை. அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்.

மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.



# உலக அமைதிக்குப் பாடுபட்ட உத்தமர்

டாக்டர் இராதாகிருஷ்ணன்



ஜவஹர்லால் நேரு நம் தலைமுறையில் மிகப் பெரிய மனிதர்களுள் ஒருவராய்த் திகழ்ந்தார். விடுதலைக்காக மிகச் சிறந்த வகையில் போரிட்ட வீரராக விளங்கினார். தற்கால இந்தியாவை உருவாக்குவதற்காக அவர் ஆற்றிய பணிகள் ஈடுஇணையற்றவை. அவருடைய வாழ்க்கையும் பணியும் நம்முடைய மன அமைப்பையும், சமுதாய அமைப்பையும், அறிவு வளர்ச்சியையும் மிக்க அளவில் முன்னேற்றியிருக்கின்றன.

நேருவிடத்தில் அருமையான நுண்ணுணர்வும் அரிய உணர்ச்சிப் பாங்கும், பரந்த தாராள மனப்பாங்குடன் கலந்திருந்தன. எளியோர்க்கும், வாழ்க்கையில் வெறுப்புற்றோர்க்கும் அவர் மனமிரங்கினார். அவர் ஒரு சிறந்த நூலாசிரியர். தம்மைப் பற்றி மிகப் பரிந்து கூறுமலும், மிக உயர்த்திக் கூறுமலும் எழுதப்பட்டிருக்கும் நேருவின் சொந்த வாழ்க்கை வரலாறு நம் காலத்தில் எழுதப் பெற்றுள்ள மிகவும் குறிப்பிடத்தக்க நூல்களுள் ஒன்றாகும்.

இந்தியா சுதந்திரமடைந்த நாளிலிருந்தே நேரு பிரதம மந்திரிப் பதவியை வகித்து வந்திருக்கிறார். இந்த நீண்ட மந்திரிப் பதவிக் காலத்தில் அவர் முன்னேற்ற, விஞ்ஞான, இனவேற்றுமையில்லாத ஆக்க வழியில் இந்தியாவைச் செலுத்தி வந்திருக்கிறார். தாராள மனப்பான்மையில், சில அடிப்படைக் கொள்கைகளில், அவர் கொண்டிருந்த நீங்காத பற்றுள்ளம் நம்முடைய சிந்தனைக்கும், வாழ்க்கைக்கும் வழிகாட்டியாயிருந்து வந்திருக்கிறது. அவருடைய கொள்கைகளும், செயல்களும் அவர் ஜனநாயகம், சுதந்திரம் ஆகியவற்றில் வைத்துள்ள பற்றினையே காட்டுகின்றன. தற்காலத்துச் சமுதாய அரசியல் நிறுவனங்களைப் பயன்படுத்திய அவர், அவற்றினுள் புதிய உயிர்ப்பை ஊட்டினார்.

நேரு தம்முடைய பலப்பல பொதுக்கூட்டச் சொற்பொழிவுகளின் மூலம் தாம் போற்றி வந்த பண்பாடுகளை மக்கள் உணர்ந்து மதிக்குமளவுக்கு மக்களுக்குக் கல்வியறிவை யூட்டினார். மக்களுடைய வாழ்க்கைநிலை உயர வேண்டுமென்று போராடினார். தம்முடைய குறிக்கோள்களை மக்கள் நன்கு உணர்ந்து கொள்ளுமாறு செய்தார். தம்முடைய சக்திவாய்ந்த இசைக் குரலால் தாம் கண்ணெனப் போற்றும் சிறந்த கொள்கைகளில் விடாப்பற்றுக் கொண்டிருக்கும் ஓர் இந்தியத் தலைமுறையினையே தோற்றுவித்து, உருவாக்கி, ஊக்குணர்ச்சியூட்டி வளர்த்துள்ளார். உயர்ந்த குறிக்கோள்களைப் பெற்றிருத்தல் மட்டும் போதாது. அவற்றைப் பெறுவதற்காக நாம் உழைக்க வேண்டும். காலம் மிகவும் முக்கியமானது. காலத்திடம் நேரு பெரு மதிப்பு வைத்திருந்தார்.

வசதியும் சொகுசும் நிறைந்த வாழ்க்கையில் வளர்ந்து வந்தவராயினும், துன்பம் நிறைந்த தேசியப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, காந்தியடிகளுக்கு அடுத்தபடியாகப் பெருந்தலைவரானார். தேசியப் போராட்டத்தில் அவர் எடுத்துக் கொண்ட பங்கும், 1947-ல் கிடைத்த சுதந்திரமும் அண்மைக் கால இந்திய வரலாற்றின் ஒரு பகுதியாகவுள்ளன.

நம்முடைய பொருளாதாரப் புதுவாழ்வு, நம்முடைய தற்கால முன்னேற்ற வாழ்க்கை இவை திட்டம் இல்லாவிடில் எய்துதற்கியலாதவை என்பதை விடுதலை கிடைக்குமுன்னரே நேரு உணர்ந்திருந்தார். உரிமை கிடைத்தவுடன் திட்டக்குழுவின் தலைவரான நேருவே, இப்போது செயற்படுத்தப்பட்டு வரும் வெவ்வேறு திட்டங்களுக்கு ஆக்கமும் சக்தியும் கொடுத்தார்.

இந்தியா சுதந்திரம் பெற்ற நாட்டை சில ஆண்டுகள் வரை நேரு நிர்மாணிக்கும் பாதையில் கற்பனைக்கும் எட்டாத துன்பங்களும், கடக்க முடியாத முட்டுப்பாடுகளும் ஏற்பட்டன. நாட்டில் பிரிவினை ஏற்பட்டதால் இலட்சக்கணக்கான மக்கள் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குக் குடியேற முற்பட்டனர். அப்போது பயங்கரமான கலகங்களும், கொள்ளைகளும், தீயிடலும் நடந்தன. அப்போது ஏற்பட்ட அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகள் எளிதில் தீர்க்கக் கூடாதவையாய் இருந்தன. இவை காந்தியடிகளிடமிருந்து அவர் பெற்ற பெரும் பணியை நிறைவேற்றுவதற்கும் பெருங் குந்தகமாயிருந்தன.

## அனைத்துலக நோக்கு

உலகத்தின் பிறநாடுகளினின்று இந்தியாவைத் தனியாகப்பிரித்துப் பார்க்கக் கூடாதென்று நேரு எப்போதும் கருதி வந்திருக்கிறார். இந்தியா விடுதலைக்கு முன்பே அவர் 'இந்தியப் பிரச்சினையானது பிறநாட்டினரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடும், ஒடுக்கப்பட்ட மக்களின் பெரிய இயக்கத்தின் ஒரு பகுதியாகும்' என்று மிக வற்புறுத்திக் கூறியுள்ளார். தம்முடைய சொந்த நாட்டு மக்களுக்காக மட்டுமின்றி உலகத்தின் எல்லா மக்களுக்கும் சுதந்திரம்

வேண்டுமென்று விரும்பினார். அதனால் ஆப்பிரிக்கா, ஆசியா, தென்அமெரிக்கா ஆகிய கண்டங்களில் எழுந்த எல்லா விடுதலை இயக்கங்களுக்கும் அனுதாபத்தையும் ஆதரவையும் அளித்தார். சாதி, சமயம், நாடு என்ற வேறுபாடுகள் இன்றி எல்லார்க்கும் சுதந்திரம் வேண்டும் என்று விரும்பினார்.

### அமைதிக்குரல்

நேரு உலக அமைதியில் பெரு நம்பிக்கை கொண்டிருந்தார்; ஒரே சமுதாயம் என்ற கருத்திலும் நம்பிக்கை கொண்டிருந்தார். ஐக்கிய நாடுகளின் குறிக்கோள் பிரகடனத்தில் நேருவைப்போல் வேறு யாரும் அவ்வளவு மிகுதியாக நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டிருக்கவில்லை. இந்த அணுசக்தி ஊழியில் போர் என்றால் நாகரிகப் பண்பாடுகளின் அழிவுப்பாதை என்றே பொருள் என்பதை உணர்ந்திருந்தார். அதனால்தான் இந்த அலங்கோலமான உலகில் அரசியலறிஞரின் உண்மையான பணி, போரின் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தாமல் உலக நாடுகளிடையே ஏற்படும் வேறுபாடுகளைத் தீர்ப்பதற்காக, உலகநாடுகளின் நெருக்கடி நிலையைக் குறித்து ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு ஒற்றுமையுடன் வாழ வழிவகுப்பதே என்று அவர் உறுதியாக நம்பினார்.

கொரியா, லாவோஸ், காங்கோ, வியட்நாம் முதலிய பல நாடுகளின் பிரச்சினைகளில் அவருடைய குரல், அமைதியை நாட்டும் குரலாயிருந்தது; அவருடைய குரல் எப்போதும் மதிப்புடன் கேட்கப்பட்டது.

அவருடைய தீரம், ஞானம், ஆளுமை ஆகியவை நம் நாட்டை ஒன்றுபடுத்தி வைத்திருந்தன. ஒற்றுமை நீடிக்க வேண்டுமானால் இந்தப் பண்புகள் போற்றிப் பார்த்து காக்கப்பட வேண்டும்.

அவர் மனித இனத்தின் விடுதலைக்காக உழைத்த பெரும் விடுதலை வீரர் என்றும் அரசியல் தளை, பொருளாதார அடிமைத்தனம், சமுதாய அநீதி, பண்பாட்டு நிலைத்தேக்கம் இவற்றினின்று மனிதர்களின் மனங்களை விடுவிக்கத் தம் வாழ்நாள் முழுதும் தம் சக்தியையெல்லாம் செலவிட்டவர் என்றும் நாம் அவரை நினைத்துப் போற்றுகிறோம்.

[ஆதாரம் : 'உலகப் பேரொளி'
நன்றி : சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

## வாழ்நாளில் எட்டில் ஒரு பகுதியைச் சிறைச்சாலையிலேயே கழித்துள்ளார் !

இந்தியாவின் சுதந்திரத்திற்குப் போராடியதற்காக, ஜவஹர்லால் நேரு அவர்கள், தம் வாழ்நாளில் 3,262 நாட்கள் (9 ஆண்டுகளுக்கு 23 நாட்களே குறைவு) சிறைத் தண்டனை அனுபவித்துள்ளார். இச்சிறைத் தண்டனையை அவர் 9 தடவைகளில் பின்கண்டவாறு அனுபவித்துள்ளார்.

| சிறைப்பட்ட காலம் | நாட்கள் | சிறைவாசம் அனுபவித்த இடம் |
|---|---|---|
| 6-12-1921—3-3-1922 | 87 | லக்னோ மாவட்டச்சிறை |
| 11-5-1922—31-1-1923 | 265 | லக்னோ மாவட்டச்சிறை |
| 22-9-1923—4-10-1925 | 12 | நாபா சிறை |
| 14-4-1930—11-10-1930 | 180 | நைனி மத்திய சிறை, அலகாபாத். |
| 19-10-1930—26-1-1931 | 99 | நைனி மத்திய சிறை |
| 26-12-1931—30-8-1933 | 612 | நைனி மத்திய சிறை, பரேலி மாவட்டச் சிறை, பஞ்சாப். டேராடூன் சிறை (உ. பி.) |
| 12-2-1934—4-9-1935 | 569 | மாநிலச் சிறை, கல்கத்தா. அலிப்பூர் மத்திய சிறை, கல்கத்தா. டேராடூன் சிறை, நைனி மத்திய சிறை, அல்மோரா மாவட்டச் சிறை (உ. பி.) |
| 31-10-1940—டிசம்பர் 1941 | 398 | கோரக்பூர் சிறை(உ.பி.) |
| 9-8-1942—15-6-1945 | 1040 | அகமத் நகர்கோட்டை, பம்பாய். |

இப்புள்ளி விவரங்களில் இருந்து கணக்கிட்டால், 74½ ஆண்டு காலம் வாழ்ந்த ஜவஹர்லால் நேரு அவர்கள், தம் வாழ்நாளில் ஏறத்தாழ எட்டில் ஒரு பகுதியைச் சிறைச்சாலையிலேயே கழித்துள்ளார் என்பது புலனாகின்றது. இச் சிறைவாச காலத்திலேயே ஜவஹர்லால் நேரு அவர்கள், - என் சுய சரிதை' (My Autobiography), உலக சரித்திரம் (Glimpses of World History), இந்தியாவின் கண்டுபிடிப்பு (The Discovery of India) ஆகிய உலகப் புகழ் பெற்ற நூல்களை எழுதினார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.



# கடின உழைப்புக்கு இணை ஏதுமில்லை!

—ஜவஹர்லால் நேரு

கடுமையான உழைப்பினுல்தான் நாம் முன்னேற்றம் அடைய முடியும். நம்முடைய சொந்த முயற்சியால் செல்வத்தைப் பெருக்க வேண்டியிருக்கும்; அப்போதுதான் சோஷலிசப் பாணியில் அமைந்த சமுதாயமும், பாரதத்துக்கு ஒரு வளமான நன்னல அரசும் ( Welfare State ) ஏற்படுத்தும் நம் கனவு நனவாகும்.

சோஷலிசம் என்ருல் விரிவான அளவில் சமத்துவம் என்பது பொருள்; சிலர் நினைப்பது போல, இருக்கின்ற செல்வத்தை எல்லாருக்கும் சமமாகப் பங்கிட்டு விடுவதால் அது வந்துவிடாது. பங்கிடுவதற்கு ஏதாவது இருக்க வேண்டும் என்பது சோஷலிசத்தின் முதல் தேவை; அதாவது, முதலில் போதுமான செல்வத்தை உற்பத்தி செய்ய வேண்டும். நிலங்களிலிருந்தும், தொழிற்சாலைகளிலிருந்தும் மேலும் மேலும் நாம் உற்பத்தி செய்யாவிட்டால், பங்கிடுவதற்கு வறுமையைத் தவிர உண்மையில் வேறு எதுவுமே இராது.

**இப்போதைய கனவு**

நெடுங்காலத்திற்கு முன் பாரதத்திற்குச் சுதந்திரம் வரவேண்டும் என்று கனவு கண்டோம்; அந்தக் கனவு இப்போது நனவாகி விட்டது.

இப்போது நாம் காணும் கனவு என்ன? பாரதத்தின் நல் வாழ்விலும், அதன் வளர்ச்சிப் பணியில் பங்கு கொள்வதிலும்—ஆடவர், பெண்டிர், குழந்தைகள் இந்தியர் எல்லோரும் பங்கு கொள்ள வேண்டும்; அவ்வாறு பங்குகொண்டு உழைப்பதால் ஏழ்மையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிக்க வேண்டும். இப்படிப்பட்ட மகத்தான உழைப்பைப் பற்றியே இப்போது நாம் கனவு காணுகின்ருேம்.

செல்வர்களுக்கும், ஏழைகளுக்கும் அதிக ஏற்றத்தாழ்வில்லாத பாரதத்தை-மக்கள் அனேகமாக எல்லோரும் சமத்துவமாக இருக்கின்ற, சாதி வேற்றுமைகளின் கொடுமை அதிகமாக இல்லாத பாரதத்தை—மக்கள் ஒன்று சேர்ந்து வாழுகின்ற பாரதத்தை—எந்தச் சாதியையும் சமயத்தையும் சேர்ந்திருந்தாலும் ஒருவருக்கொருவர் கூட்டுறவு உணர்ச்சியுடன் பாடுபடுகின்ற பாரதத்தை-உருவாக்குவது பற்றி இப்போது கனவு காண்கின்ருேம்.

இந்தப்பணி நம் சொந்த நலனுக்காக-நாட்டு நலனுக்காகச் செய்வது; அமைதியை உண்டாக்குவதற்காக-உலகம் முழுவதிலும் அமைதி பாதுகாக்கப்படுவதற்காக நாம் இந்தப் பணியைச் செய்கிருேம். நாம் முன்னேற்றம் அடைந்தால்தான் இது நடைபெற முடியும்.

**உற்பத்தியைப் பெருக்க வேண்டும்**

வெளிநாடுகளிலிருந்து ஏதேனும் உதவி பெறுவதன் மூலம் வறுமையையும் வேலையின்மையையும் ஒழித்து விட முடியாது. இன்று வளமாக இருக்கிற நாடுகளெல்லாம், உற்பத்தியைப் பெருக்கிச் செல்வத்தைத் தங்கள் முயற்சியாலேயே உண்டாக்கியிருக்கின்றன. நமக்கு வேண்டியுள்ள செல்வத்தை நாமேதான் உண்டாக்க வேண்டும்.

பாரத நாட்டின் செல்வத்தை மிகுதியாக்குவதற்காக நாடு முழுவதிலும் பெரிய தொழிற்சாலைகளையும், இயந்திரங்களையும், மின்சார நிலையங்களையும் நிறுவி வருகிருேம். அப்படியிருந்தும்கூட, நிலத்திலிருந்து உண்டாகும் செல்வத்தை அதிகப்படுத்த வேண்டியது இன்றியமையாதது; ஏனெனில் விளைச்சல் உற்பத்தியின் மிகுதியைக் கொண்டு சிறிய தொழிற்சாலைகளையும், பெரிய தொழிற்சாலைகளையும் ஏற்படுத்த முடியும்.

**சமுதாய வளர்ச்சி இயக்கம்**

அரசாங்கத்தாலோ, சட்டங்களாலோ, அதிகாரிகளாலோ இதைச் சாதிக்க முடியாது; மக்களால்தான் சாதிக்க முடியும். இதற்காகத்தான், கிராமவாசிகள் தங்கள் உழைப்பாலேயே முன்னேற்றம் பெறுவதற்காகச் சமுதாய வளர்ச்சி இயக்கம் தொடங்கப்பட்டது.

கிராமவாசிகளின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும், முன்னைவிட மக்கள் சுறுசுறுப்பாகக் கூட்டுறவு முயற்சியில் ஈடுபடுவதற்கும் சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் (Community Development Blocks ) பொதுவாக உதவி செய்துள்ளன என்று நம்புகிறேன். சமுதாய வளர்ச்சி இயக்கத்தில் கூட்டுறவு இலட்சியமும் சேர்க்கப்பட்டுள்ளது. இது, கூடி உழைப்பதையும் தன்னைத் தான் சார்ந்திருப்பதையுமே குறிக்கிறது. குடிமை ( Civic ) வாழ்வு, பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவற்றைக் கவனித்துக் கொள்ளுவதற்குப் போதிய அளவு அதிகாரம் பெற்ற வலிமையான பஞ்சாயத்தும், கிராமத்துக்கு ஒரு சிறந்த கூட்டுறவியக்கமும் இன்றியமையாதவை.

தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களின் ( Committees ) மூலமாக மக்களே கூடி வேலை செய்யும்படி செய்வதற்காக ஏற்பட்டவை சேவைக் கூட்டுறவுகள் ( Service Co-operatives ). இந்தச் சேவைக் கூட்டுறவுகளைப் பரப்ப வேண்டுமென்றும், மக்கள் விரும்புகின்றபொழுது அவர்களுக்கு பயிற்சி தர வேண்டும் என்றும் முடிவு செய்திக்கிருேம்.

மற்ற இடங்களைவிடச் சென்னை மாநிலத்தில் இந்தக் கூட்டுறவு இயக்கங்கள் மிக விரைவாக வளரும் என்பதில் எனக்கு ஐயமில்லை; எனவே, இந்தப் புதிய திட்டத்தில் சென்னை விரைந்து முன்னேறுவதை எதிர்நோக்குகிறேன்.

(இராச பாளையத்தில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து. மே, 1959.)

# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு
# பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனால் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன:—

நெல் (ஏக்கருக்கு)

| *உரம்* | *சாகுபடி* செலவு ரூ. | *விளைச்சல்* (மூட்டை 75 கிலோ) | *வருவாய்* (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18. | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும்.உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017






MFL-1162



# வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்!

—ஜவஹர்லால் நேரு

உலகத்துக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற ஆசை மிக் உயர் வானதுதான். ஆனால் அதற்கு முன்னதாக நாம் ஒரு உண்மையை நம் சிந்தனையில் நிறுத்த வேண்டும்.

முதலில் நம்முடைய சொந்த நாட்டுக்கு நாம் பணி புரிய வேண்டும். மிகப் பெரிய இந்திய சமுதாயத்தின் உறுப்பினர்கள் என்ற முறையில், நமக்கு நாமே பணி புரியக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் உலகத்துக்குச் சேவை செய்யும் தகுதியும், வசதியும் நம்மை வந்து அண்டி நிற்கும்.

மதக் குழப்பங்களையும், சாதிப் பூசல்களையும், வித விதமான தடை மதில் முட்டுக்கட்டைகளையும் தனக்குத் தானே உண்டாக்கி, தன்னைத் தானே கூறுபோட்டுக் கொள்வதில் நம்முடைய தேசிய சமுதாயத்துக்கு விருப்பமதிகம்.

கடந்த காலத்தில் நம்முடைய மாபெரும் பலவீனமாக, இந்த மனப்போக்கு நமது சமுதாயத்தில் நிலைத்து நின்று, நமது சமுதாயம் தனக்குத்தானே சீர் குலைந்து தாழ்வதற்கு வகை செய்து வந்திருக்கிறது.

இந்த மனப்பான்மை எதிர் காலத்தில் முறியடிக்கப் படாவிட்டால், நாம் எந்த வகையிலும் தலையெடுக்கவே முடியாது என்பது திண்ணம்.

பல நூற்றாண்டுகளாக உலகத்தின் மற்ற பாகங்களுடன் ஸ்தூல மானசீகத் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டு இந்தியா ஒதுங்கியிருந்தது. வளரும் சக்தியை நமது நாடு இழந்ததற்கு இதுவே அடிப்படைக் காரணமாகும். தற்பெருமை கொண்டு வெளியுலகை விழித்துப் பார்க்க மறுத்த இந்தியா, அப்படியே அசைவின்றித் தேங்கி நின்று விட்டது.

## தேசத்தின் பெருமை

ஒரு தேசத்தின் பெருமை—சிறப்பு எதில் அடங்கியிருக்கிறது? என்று ஒரு வினாவை எழுப்பிக் கொண்டு விடையைத் தேடுவோம்.

என்னைப் பொறுத்தமட்டில் ஒரு தேசத்துக்குப் பெருமையளிப்பது அதன் பொன்னும், வெள்ளியும் அல்ல என்றுதான் சொல்வேன். மனித வரலாற்றைப் படித்திருந்தால், நான் சொல்லும் உண்மை எளிதில் விளங்கும்.

ஒரு நாட்டின் இயற்கை வளங்களான இரும்பு, நிலக்கரி போன்ற ஸ்தூலப் பொருள்களின் முக்கியத்துவத்தை நான் குறைத்து மதிப்பிடவில்லை. என்றாலும், ஒரு நாட்டில் உள்ள மக்களின் பண்புணர்ச்சியைப் பொறுத்தே அதற்குச் சிறப்பு ஏற்படுகிறது. தங்கள் மக்களின் உயர் பண்பு காரணமாக (மக்கள் எண்ணிக்கை காரணமாக அல்ல) பெருமை பெற்றுள்ள சிறிய தேசங்கள் எத்தனையோ உண்டு.

## கலை உணர்ச்சியே பெருமை அளிக்கிறது!

கடந்த காலத்தில் நமது மக்களின் குறிப்பிட்ட ஒரு பண்பு இந்த நாட்டின் சிறப்பு ஓங்கியது. இந்திய வரலாற்றில் பொற்காலம் என்று சில காலக் கட்டங்களை குறிப்பிடுகிறோம். அவ்விதம் அவை பெருமை பெற்றதற்குப் போர்தினவு கொண்ட மன்னர்களின் வெற்றி மட்டும் காரணமல்ல. கலை வளர்ச்சியாலும், அக்காலக் கட்டங்கள் பெருமை பெற்றன. உண்மையில் இன்று நாம்

பண்டைப் பெருமைகளைப் பன்னிப் பன்னிப் பேசுங்கால், நம்முடைய போர் உணர்ச்சியை விட, கலை உணர்ச்சியைப் பற்றிக் குறிக்கும் போதுதான் நமது மனத்தில் பெருமையுணர்ச்சி பொங்கித் தவழுகிறது.

நாம் சுதந்திரம் பெற்ற பிறகு கோடிக்கணக்கான நமது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் பெருநோக்கத்துடன், பொருளாதாரப் பிரச்சினைகளுடன் போராடிக் கொண்டிருக்கிறோம். நமக்கு நியாயமான—சரியான—வெற்றி தேவையென்று சொன்னால், நாடு உண்மையாகச் சீரானதொரு வளர்ச்சியை எட்டிப் பார்க்க வேண்டுமென்றால், நமக்கென ஒரு நற்பண்பை நாம் வளர்த்தாக வேண்டும்.

இமயம், லடாக், காஷ்மீர் ஆகியவற்றில் தொடங்கி, கன்னியாகுமரி இறுதியாகப் பார்ப்போமேயானால் எத்தனையோ விதமான வேறுபாடுகள் நம்முடைய நாட்டிலே மண்டிக்கிடப்பதை உணரலாம். மற்றும் இயற்கை அமைப்பு, நிலச் சூழல், சீதோஷ்ண நிலை ஆகியவற்றிலும், இன்னும் பல விஷயங்களிலும் இங்கே வேறுபாடுகள் மலிந்து கிடக்கின்றன.

**உணர்ச்சிபூர்வமான ஒருமைப்பாடு தேவை!**

இன்று நாம் அரசியல் ரீதியில் ஒன்று பட்டிருக்கிறோம். ஆனால் இது மட்டுமே நம்முடைய பலமான ஒருமைப்பாட்டை நிச்சயப்படுத்திவிட முடியாது. மேலே கண்ட ஏராளமான வேறுபாடுகளின் இடையே உணர்ச்சி பூர்வமான ஒருமைப்பாடு-நெருக்கமான உறவு—தோன்றியாக வேண்டும். இன்று நம் முன் நிற்கும் மகத்தான குறிக்கோள் இதுதான். இந்தக் குறிக்கோளை நாம் எட்டிப் பிடிக்காதவரை, பாரத சமுதாயத்தின் பலத்தைப் பற்றிப் பெருமை பேசிக் கொள்வதில் அர்த்தமே இல்லை.

படை வீரர்களை ஒரே அணியில் நிறுத்துவது போன்றதொரு ஒருமைப்பாட்டை நாம் விரும்பவில்லை. சமுதாய அமைப்பில் அந்த முறை வெறுக்கத்தக்கதாகும்.

பாரத மண்ணிலே ஏற்கனவே முளைத்துத் தழைத்திருக்கும் கலாசார முறைகளை நாம் அழிக்க விரும்பவில்லை. அவைகளைக் கட்டிக்காக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய ஆசை. ஆனால் தனித் தனியாகச் சிதறுண்டு கிடக்கும் கலாச்சாரக் கிளைகளை அறிவியல் பூர்வமாகவும், உணர்ச்சி பூர்வமாகவும் கட்டிச் சேர்க்க விரும்புகிறோம்.

நாம் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முடியாமல், நெருங்கி உறவாட முடியாமல் பிரித்து வைக்கின்ற தடைகளை, நம்முடைய தீர்க்கமான பார்வையின் சக்தியைக் குறைக்கின்ற தீமைகளை ஒதுக்கித்தள்ளவே விரும்புகிறோம். இந்த நோக்கத்தில் தான் குறுகிய சாதி, மத, இனத்தடைகளையெல்லாம் களைந்து தள்ளும் முயற்சியில் ஈடுபடுகின்றோம்; இந்தத் தடைகளை நாம் துரிதமாக அகற்றாவிட்டால் நம்முடைய வளர்ச்சி அடியோடு குன்றிவிடும்.

நாம் மகத்தான காரியங்களைச் சாதித்தாக வேண்டியிருக்கின்றது. ஒவ்வொரு விதத்திலும் (உள்ளத்திலும் உணர்விலும்), நாம் பெரிய மனிதர்களாக விளங்கினால்தான் இத்தகைய பெரிய காரியங்களை நிறைவேற்ற முடியும்.

**(1952—அக்டோபரில், சென்னை மாநிலக் கல்லூரியில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.)**




## ரூபா இருபதுக்குப் பலூன்

தென் இந்தியாவில் நேரு சுற்றுலா வந்து கொண்டிருந்தார். வழியெல்லாம் காரை நிறுத்தி மக்களுக்குக் காட்சியளித்து வந்தார். இடையில் ஓர் ஊரில் கார் நிறுத்தப்பட்டது. வழி ஓரத்தில் முதியவர் ஒருவர் பலூன் விற்றுக் கொண்டிருந்தார். அவருடைய முதிர்ந்த நிலையையும் தள்ளாத பருவத்தையும் பார்த்த நேரு வண்டியிலிருந்து இறங்கி அம் முதியவரின் தோள் மீது அன்புடன் கையைப் போட்டார்.

பலூன்களின் விலை என்னவென்று கேட்டார். பலூன் ஒன்றின் விலை இரண்டணா என்றார் அந்த முதியவர். அவரிடம் சில பலூன்கள் இருந்தன. நேரு வழக்கமாகப் பணம் எதுவும் கையில் எடுத்துச் செல்வதில்லை. உடனே அருகிலிருந்த ஒருவரிடம் ரூ. 20 கடன் வாங்கி முதியவரிடம் கொடுத்து அவரிடமிருந்து பலூன்களை யெல்லாம் வாங்கி, சுற்றி நின்று கொண்டிருந்த சிறுவர்களிடம் கொடுத்து விட்டார்.


கப்பலோட்டிய தமிழன்
வ. உ. சிதம்பரனர்
தோற்றம் : 5 - 9 - 1872.
மறைவு : 18 - 11 - 1936.

# கவிஞர் போற்றும் சிதம்பரனார்



'வேளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்
மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதைவிரைவிற் கேட்பாய்நீ
வருந்தலைஎன் கேண்மைக்கோவே!
தாளாண்மை சிறிதுகொலோ யாம்புரிவேம்
நீஇறைக்குத் தவங்கள் ஆற்றி,
வேளாண்மை நின்துணைவர் பெறுகெனவே
வாழ்த்துதிநீ வாழ்தி! வாழ்தி!!

—சுப்ரமணிய பாரதியார்

எல்லாரும் தேசபக்தர் இந்த நாளில்
எத்தனையோ சிறைவாசம் இனிதாய்க் காண்பார்
சொல்லாலும் எழுத்தாலும் விளக்க வொண்ணாத்
துன்பமெல்லாம் சிறைவாசம் அந்த நாளில்
வல்லாளர் சிதம்பரனார் சிறையிற் பட்ட
வருத்தமெலாம் விரித்துரைத்தால் வாய்விட் டேங்கிக்
கல்லான மனத்தவரும் கண்ணீர் கொட்டிக்
கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும்

—நாமக்கல் கவிஞர்


'அஞ்சுவனோ! வெள்ளையரின் ஆட்சியொழிப் பேன்'என்று
வஞ்சினம் கூறிநின்ற மாவீரன்—விஞ்சுபுகழ்
செந்தமிழ்ச் செம்மல் சிதம்பரப்பே ரண்ணலைநாம்
வந்தனை செய்வோம் மகிழ்ந்து.

கைநோவக் கால்நோவக் கல்லுடைத்துச் செக்கிழுத்து
மெய்சோர்ந்தும் ஊக்கம் விடாதுநின்ற—ஐயன்
சிதம்பரம் அன்றுசிறை சென்றிலனேல், இன்று
சுதந்திரம் காண்பாயோ சொல்.

கப்பலை ஓட்டிக் கடுங்காவற் காளாகி
உப்பிலாக்கூழ் உண்டுடல் மெலிந்தோன்—ஒப்பிலாத்
தென்னாட்டு வீரதிலகன் சிதம்பரத்தின்
நன்னாமம் வாழ்த்துகஎன் நா.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை





# சிதம்பரத்திற்கிணை செப்புவ தெங்கே?


சுத்தானந்த பாரதியார்

வீரச்சி தம்பரம் பிள்ளை—தமிழ்
வித்தகன்; முத்தமி ழன்பன்
பாரத சுதந்திரச் சிங்கம்—நல்ல
பண்பாடு மிக்கவ ரகுணத் தங்கம்!

எங்கள்சி தம்பரம் என்னில்—நெஞ்சில்
ஏறிடும் வீரக்க னலெழுந் தாங்கே!
பொங்கிடும் தேசா பிமானம்—அச்சம்
போயொழி யும்இன்பப் புன்னகை மலரும்!

திலகரின் வலக்கரம் ஆனன்—அவன்
செந்தமிழ் நாட்டுச் செயமுரசானன்!
பொலமிகு பாரதி பாட்டில்—வீரப்
புலவனின் உள்ளமே துள்ளிடக் காண்போம்!

வங்கம்ந டத்திய சிங்கம்—ஓம்
வந்தேமா தரமெனும் மந்திரம் பொங்கும்!
எங்கள்சு தேசி இயக்கம்—வெல்லும்
என்றுமுன் சென்றனன் இடர்களி னூடே!



காலில் விலங்குகள் பூட்டி—கடுங்
கார்சிறை யிட்டங்கு செக்கும் இழுக்க
வேலைசெய் வேர்வைத் துளிகள்—நாட்டு
விடுதலைப் பயிருக்கு விண்மழை போலும்!



தியாகச்சி தம்பரம் என்னில்—எங்கள்
செய்கையி லேஒரு திட்பங்க னலுது!
வேகம் பறக்குது வாழ்வில்—ஆண்மை
வீறுபெ ருகுது விடுதலைப் போரில்!

திருக்குற ளேஅவன் மூச்சு—வீரத்
திலகரின் உள்ளத் துடிப்பவன் பேச்சு!
உருக்குமென் னெஞ்சத்தை அன்னேன்-சொன்ன
உரைகளைப் பருகியு யர்ந்தனன் முன்னே!

அத்தகை நண்பனின் றெங்கே?—சற்றும்
அச்சமில் லாதஅ றிஞனிங் கெங்கே?
சித்த வுறுதியும் எங்கே?—ஒரு
சிதம்பரத் திற்கிணை செப்புவ தெங்கே?

(புக்ஸ் வொர்ல்டு வெளியிட்டுள்ள ‘ விடுதலைவீரர் வ. உ. சி. என்னும் நூலிலிருந்து)

# சிதம்பரனார்க்கு நன்றி!....

—எஸ். சண்முகசுந்தரம்.







தென்கோடி பாரதத்தில் நெல்லை மண்ணில்
செஞ்சுடராய்ப் பெரும்புயலாய் ஒருவர் நின்றார் ;
பொன்னுடாம் வங்கத்தை இரண்டாய்க் கூறு
போட்டதனை எதிர்த்தந்நாள் முழக்கம் செய்தார் ;
கண்ணுன மாந்தர்களின் உறவை எல்லாம்
கனவாக்கிப் பிரிவினையை விளைச்சல் செய்த
மண்ணுண்ட வெள்ளையரின் திமிரைப் போக்கப்
பாய்ந்தெழுந்தார் சிதம்பரமாம் வீரச் செம்மல் !

"எங்கிருந்தோ வந்தவரால் இந்த நாடு
இன்னலிலே நெளிவதனை எவ்வா றேற்பேன் ?
பொங்கிவரும் எரிமலையாய்—புனலை அள்ளிப்
புரண்டுவரும் பேராருய்க் காணும் மக்கள்
சங்கடங்கள் தீர்க்காமல் சொந்த வாழ்வில்
சாதனைகள் புரிவதனுல் பயன்தான் என்ன ?
தங்கமெனும் இந்தியத்தாய் நாட்டோர் வாழத்
தகுந்தவழி நான்காண்பேன்" என்றே சொன்னர்.

"கடல்மீது கலம்விட்டுச் செல்வ மெல்லாம்
கவர்கின்ற வெள்ளையரின் கொள்ளைத் திட்டம்
தடைப்படுத்த வேண்டுமென்ருல் நமக்குத் தேவை
தனியான ஓர்கப்பல்! அதனைக் காண
உடல்மீது இழையோடும் உயிர்மூச் சுப்போல்
உருவாக வேண்டுமொரு 'சங்கம்'" என்ருர்;
மடல்விரிந்த மலர்போலும் மகிழ்ச்சி கொண்டே,
மாண்புடையோர் முன்வந்தார் ; சங்கம் கண்டார்.

ஆலைகளில் பணிபுரிவோர் அடைந்த துன்பம்
அகற்றிடவே இவர்முயன்ருர் ; அலுவல் நேரம்
காலைமுதல் மாலைவரை நீளும் போக்கைக்
கண்டித்தார் ; நேரத்தைத் திட்டஞ் செய்ய
வேலைநிறுத் தஞ்செய்தார்; வெள்ளை ஆட்சி
விதிர்விதிர்க்கும் செயல்செய்தார் ; வரலா றென்னும்
சோலையிலே இவர்பெரிய சூர்ய காந்தி
சுதந்திரப்போர் வானத்தில் துருவ வெள்ளி!

அரசியலார் அந்நாளில் இவர்க்குச் செய்த
அநியாயம் நினைத்தாலே நடுக்கம் ஆகும் !
முரசறைந்த ஒலிபோல முழக்கம் செய்த
முத்தமிழின் வித்தகரைக் குற்றம் சாட்டி
அரசநிந் தனைவழக்கில் மாட்டி வைத்தார் ;
ஆண்டாண்டுச் சிறைவாசம் தேடித் தந்தார் ;
புரசமரம் போலிருந்த செக்கைத் தந்தே
புல்லுண்ணும் மாடேபோல் இழுக்கச் செய்தார்.

தாய்நாட்டின் சுதந்தரத்தைக் காண்ப தற்கே
தண்ணிலவாய் நம்நாடு ஒளிர்வ தற்கே;
பாய்புலியாய் வீறுகொண்டே எழுந்த வீரர்
பாழான வெங்கொடுமைச் சிறையில் நொந்தார் ;
காய்மனத்துக் காரர்களால் துன்ப மாலை,
கழுத்தினிலே அவர்பெற்ருர் ; தூய்மை மிக்க
தாய்மனத்து வீரரினல் நாமெல் லாரும்
தண்புனலாய் வாழ்கின்ருேம் ; அவர்க்கு நன்றி!



# கோவையில் என் தந்தை

—வ. உ. சி. ஆறுமுகம்

['கப்பலோட்டிய தமிழன்' வ. உ. சிதம்பரனாரின் மூத்த புதல்வரான, திரு. வ. உ. சி. ஆறுமுகம் அவர்கள், வ. உ. சி. கோவையில் இருந்த காலத்தில் நடந்த சுவையான தகவல்களை இங்கே கூறுகிறார். திரு. வ.உ.சி. ஆறுமுகம் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை.]

**1912**-ஆம் ஆண்டில் கண்ணனூர் சிறையிலிருந்து விடுதலை அடைந்த பின்னர் என்தந்தை தேசபக்தர் வ. உ. சிதம்பரனார், பல நண்பர்களின் வேண்டுகோளின்படி எங்கள் சொந்த ஊரான ஒட்டப்பிடாரத்தில் தன் பெற்றோர்களைக் காணச் செல்லாமல் சென்னைக்குச் சென்றார்கள்.

சென்னை மயிலாப்பூரில் பரிபூரண விநாயகர் கோவில் தெருவில் சிறிது காலம் வசித்து வந்தோம். மயிலாப்பூரில்தான் தேசபக்தர் சுப்பிரமணிய சிவா வசித்து வந்தார். அவர் 'ஞானபானு' என்ற ஒரு தமிழ்ப் பத்திரிகை நடத்தி வந்தார். கவி சுப்பிரமணிய பாரதியும் குடும்பத்துடன் மயிலையில்தான் வாழ்ந்து வந்தார். இரு தேசபக்தர்களும் அடிக்கடி என் தந்தையவர்களுடன் அரசியல் சம்பந்தமாகப் பேசுவார்கள்.

நான் சிறுவன், கூடமாட அவர்கள் சிற்றேவல்களைச் செய்து வருவேன். தமிழ்த் தந்தை திரு வி. கலியாணசுந்தர முதலியாரும், தமிழ்ப் பேராசிரியர் டி. செங்கல்வராய முதலியாரும் என் தந்தையைக் காண வருவார்கள். சென்னையில்தான் என் தந்தை 'வலிமைக்கு மார்க்கம்' 'சாந்திக்கு மார்க்கம்' என்ற நூல்களை எழுதிக் கொண்டு இருந்தார்கள். நமது முன்னாள் இந்திய ஜனாதிபதி திரு. வி. வி. கிரி, ஆதியில் என் தந்தையுடன் தொழிலாளர் இயக்கத் தலைவராக இருந்தார். டாக்டர் பெசண்ட் அம்மையார், பி. சக்கரைச் செட்டியார், டாக்டர் அருண்டேல், என். தண்டபாணி பிள்ளை முதலியோர் தலைமையில் சென்னை எம். எஸ். எம். இரயில்வேத் தொழிலாளர் சங்கம் ஆரம்பமாயிற்று. காலையில் ஆறுமணிக்கு வேலைக்குப் போனால் மாலை 6 மணிக்குத்தான் வேலையிலிருந்து விடுவிப்பார்கள். தொழிலாளர் சங்கம் ஆரம்பித்த பின்னர், 12 மணி நேர வேலை 10 மணி நேர வேலை ஆயிற்று. சம்பள உயர்வு, ஞாயிறு விடுமுறை, 'கேசுவல் லீவு' மருத்துவ விடுமுறை முதலியன நாளாரம்பத்தில் அனுமதிக்கப்பட்டன.

சென்னையில் எங்கள் குடும்பம் துன்ப நிலையில்தான் இருந்தது. லோகமான்ய பால கங்காதர திலகர் இந்தியன் ஹோம் ரூல் நிதியிலிருந்து என் தந்தைக்கு மாதம் நூறு ரூபாய் அனுப்பி வந்தார். சென்னையில் நாங்கள் இருந்த சமயம் 1918-ஆம் ஆண்டு திலகர் பெருமகன் சென்னைக்கு வந்தார். மாலையில் கொட்டும் மழையில் திலகர் பிரசங்கம் நடந்தது. திலகரின் ஆங்கிலப் பேச்சை என் தந்தை தமிழில் மொழி பெயர்த்தார். திரு. வி.வி. கிரி கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். சென்னையில் தொழிலாளர் இயக்கம் வெற்றியோடு முன்னேறி வந்தது. அந்தச் சமயம் கோயம்புத்தூரில் ஏழு மில்கள் தான் இருந்தன. அங்கு தொழிலாளர் இயக்கம் நல்ல முறையில் ஆரம்பிக்கப்படவில்லை. கோவையிலிருந்து திரு சி.பி. சுப்பையா, வெள்ளிங்கிரிக் கவுண்டர் முதலிய தொழிலாளர் தலைவர்கள் சென்னைக்கு வந்து என் தந்தையைக் கோவைக்கு வரும்படி அழைத்தார்கள். என்தந்தையும் கோவையில் தொழிலாளர் இயக்கத்தைத் ஆரம்பிக்க எண்ணிக் குடிபெயர்ந்தார்.

1919-ஆம் ஆண்டு கோவைக்கு நாங்கள் குடிவந்ததும் மால்மில் ரோட்டில் சுப்புராய ஆச்சாரி வீட்டில் தங்கியிருந்தோம். அந்தக் காலத்தில் கோயம்புத்தூரில் என் தந்தைக்கு உறுதுணையாக இருந்த தமிழ்ப் பெரியார் திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் ஆவர். கோவைச் சிறையில் என்தந்தை கொடுந் தண்டனை அனுபவித்து, செக்கிழுத்து, கல் உடைத்துத் துன்பப்பட்டபோது திரு முதலியார் என் தந்தைக்குச் சிறையில் இரகசியமாகப் பல உதவிகள் புரிந்து வந்தார். அவருக்கு ஜெயில் வார்டன் திரு. கே. இராமய்யக் கவுண்டர் தூதுவராக இருந்து, வேண்டிய உதவிகள் செய்து வந்தார். அதன் பயனாய் திரு. இராமய்யக் கவுண்டர் வேலை நீக்கம் செய்யப்பட்

டார். திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் என் தந்தைக்குச் செய்த உதவியைப் போற்றுவான் வேண்டி, என் தம்பிக்கு சுப்பிரமணியனெப் பெயரிட்டுத் தன் நன்றியறிதலைத் தெரிவித்தார்கள்.

1920-21-ஆம் ஆண்டில் கோவை நகராட்சித் தலைவராகத் திவான்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் இருந்தார். சாரட்டு வண்டியில் திரு. இரத்தினசபாபதி முதலியார் என் தந்தையைக் காணவருவார். திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார், 'ஹோம்ரூல்' இயக்கப் பிரமுகர் திரு. என்.எஸ். இராமசாமி அய்யங்கார், தமிழ் மேதை திரு. சி. எஸ். இராமச்சந்திரன் செட்டியார், கூட்டுறவுத் தந்தை திரு. டி. ஏ. இராமலிங்கம் செட்டியார் முதலிய பெரியோர்களும், மில் தொழிலாளர் சங்கத் தலைவர்களும் என் தந்தைக்குப் பூரண ஒத்துழைப்புக் கொடுத்து வந்தார்கள். அதன் பயனாகக் 'கோயம்புத்தூர் தொழிலாளர் பேங்கு அண்டு ஸ்டோர்ஸ் லிமிடெட்' என்ற ஒரு நிறுவனம் கம்பெனி சட்டப்படி பதிவு செய்யப்பட்டது. தொழிலாளர்களுக்குக் கடன் வசதியும், பண்டகசாலையில் உணவுப் பொருள் முதலியன குறைந்த விலையில், குறையாத எடையில் அதிக இலாபமின்றி விநியோகம் செய்யப்பட்டு வந்தது. தொழிலாளர் வங்கியும் பண்டகசாலையும் நல்லமுறையில் பல ஆண்டுகள் நடந்து வந்தன.

அந்தச் சமயம் 1920-ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். மகாத்மா காந்தி கோவைக்கு எங்கள் வீட்டுக்கு வந்தார். அப்போது மகாத்மா காந்தி அரை நிர்வாண உடை தரிப்பதில்லை. பஞ்சகச்சம் வைத்துக் கட்டிய கதர் வேட்டியும் முழுக்கை ஷர்வாணியும், தலைப்பாகையும் அணிந்து வந்தார். என் அன்னை மீனாட்சி அம்மையார், காந்தி மகானுக்கு நமது தமிழ்நாட்டுச் சைவ உணவு பரிமாறினார். அதைக் காந்தி ரசித்து உண்டார். கீரை வகைகளும், காய்கறிகளும் அவர் விரும்பி உட்கொண்டார்.

அன்று மாலையில் புளியந்தோப்பு மைதானத்தில் மாபெரும் கூட்டம் நடந்தது. வழக்கறிஞர் திரு. என். எஸ். இராமசாமி அய்யங்கார் தலைமை தாங்கினார். காந்தியின் ஆங்கிலப் பேச்சை என் தந்தை தமிழ்படுத்தினார். உடுமலை திருமதி மீனாஷி அம்மையார் ஆவேசமாகப் பிரசங்கம் செய்தார். மற்றும் பல தேச பக்தர்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிராகப் பிரசங்கம் செய்தார்கள்.

கோவையில் நாங்கள் வசித்து வந்த சமயம் நடந்த ஒன்றிரண்டு சம்பவங்களைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

தினந்தோறும் ஒரு பரங்கியன் குடையைத் தோளில் சாத்திக் கொண்டு எங்கள் வீட்டைப் பார்த்துக் கொண்டே போவான். அவன் மில்லில் டைம் கீப்பராகவோ என்னவோ வேலை பார்த்து வந்தான். என் தந்தைக்கு அவன் மீது ஏனோ வெறுப்பு. ஒருநாள் மாலை சுமார் 5 மணி இருக்கும். அந்தப் பரங்கி, வேலையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தான். நான் வீட்டில் இருந்தேன். என் தந்தை என்னைக் கூப்பிட்டு 'அதோ வருகிறானே ஒரு துரை, அவனை இந்தச் செருப்பால் முதுகில் இரண்டு அடி கொடு' என்று கூறினார். நான் பயமறியாத சிறுவன். ஓடிப்போய் அந்த பரங்கியன் முதுகில் இரண்டடி போட்டேன். அவன் கூக்குரல் போட்டான். கூட்டம் கூடிவிட்டது. அவன் போலீசில் புகார் செய்தான். சிறிது நேரத்தில் சரிகைத் தலைப்பாகை வைத்த ஒரு சப்-இன்ஸ்பெக்டரும், இரண்டு போலீசாரும் வந்தனர். என் தந்தையிடம் விவரம் கேட்டனர். 'சிறு பையன் அடித்து விட்டான். இனிமேல் பார்த்துக் கொள்கிறேன்' என்று என் தந்தை சமாதானம் கூறியதும் சப்-இன்ஸ்பெக்டர் திரும்பி விட்டார். ஆங்கிலேயர் மீதுள்ள வெறுப்பேதான் இதற்குக் காரணம் என்பதை நான் பின்னர் தெரிந்து கொண்டேன்.

தினந்தோறும், காலையிலும், மாலையிலும் கள்ளுப் பானைகளை ஏந்திய ஒத்தை மாட்டு வண்டி எங்கள் வீட்டு வழியாகச் செல்லும். நான்கு மொடா பானைகள், வண்டியிலிருக்கும். பெரிய பானைகள், மிகப் பெரிய பானைகள். ஒருநாள் என் தந்தை ஒரு கல்லைக் கொடுத்து ''கள்ளு வண்டி அதோ வருகிறது. வரும்போது முன்னால் உள்ள பானையை உடைத்துவிடு'' என்று கூறினார். நானும் ஓடிப் போய் முன்பானையை ஓங்கி ஒரு இடி இடித்தேன்: பானை உடைந்தது. கள் ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடியது. அதுமட்டுமல்ல, முன்னால் உள்ள பானை காலியானதால் பின்பாரம் அதிகமாகி வண்டி குடை கவிழ்ந்து, எல்லாக் கள் மொடாக்களும் உடைந்து, தெருவெல்லாம் கள், ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடியது!

அந்தக் காலத்தில் மதுவிலக்கு இல்லாத காலம்! கோயம்புத்தூரில் நாங்கள் வசித்து வந்த சமயம் பாலக்காட்டுப் பிரதேசத்தில் 'மாப்பிள்ளைக் கலகம்,' நடந்தது. ஆங்கிலேயரை எதிர்த்து மலையாளிகள் கலகம் செய்தார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இப்போது மாதிரி கார் வசதி, ஆகாய விமானம், துரித இரயில் போக்குவரத்துக் கிடையாது. தந்திக் கம்பிகளை அறுத்து தொடர்பில்லாமல் செய்து, இரயில் பாலம், தண்டவாளம் முதலியவைகளை அகற்றி, ஆங்கில சிப்பாய்களை எதிர்த்து, மலையாளக் குடிமக்கள் போர்புரிந்து அவர்களைக் கலங்க வைத்தனர். ஆங்கிலேயர்களும் முதலில் கொஞ்சம் அஞ்சி நடுங்கத்தான் செய்தார்கள். அப்போது கோயம்புத்தூர் இரயில் நிலையம் மிகச் சிறியதாக புளியந்தோப்புக்குப் பக்கத்தில் இருந்தது. காற்றுப் புகாத குட்ஸ் இரயில் பெட்டியில் மலையாளக் கைதிகளை வாகன் நிறையத் திணித்து குட்ஸ் வண்டியில் ஏற்றி வெளியூர்களுக்கு அனுப்பினார்கள்.

கோவை இரயில் நிலையத்தில் வாகனைத் திறந்தால் மலையாள


## வ. உ. சி.யின் திருக்குறள் பாடம்

பிள்ளையவர்கள் அநேகருக்குத் தமிழ்க் கல்வி போதித்து வந்தார். தாம் சொல்லிக் கொடுத்தவற்றை மறுநாள் ஒப்புவிக்க வேண்டும். இன்றேல் வேறு பாடம் நடத்த மாட்டார்.

இவரிடம் பாடம் கற்றுக் கொள்வது எல்லோருக்கும் எளிதல்ல. ராஜாஜி அவர்கள் சிதம்பரனாரிடம் திருக்குறள் பாடங் கேட்டபோது அவரது நிபந்தனைகள் பிடிக்காமையால் ''எனக்குப் பாடஞ் சொல்லித் தரும் பொறுமை தங்களுக்கில்லை தங்களிடம் பாடம் கேட்கும் பொறுமை எனக்குமில்லை'' எனக் கூறி விடை பெற்றுக் கொண்டாராம்.

இதனை, ராஜாஜியே சென்னைப் பொதுக்கூட்டம் ஒன்றில் வெளியிட்டார். இவர் திருக்குறளைப் பெரும்பாலும் மணக்குடவர் உரை கொண்டே விளக்குவார். பரிமேலழகர் உரையில் கலந்து உள்ள காலத்திற்குப் பொருந்தாத கருத்துக்களைக் கண்டிப்பார். அவ்விருவர் உரையும் பொருந்தாவிடில் தம் உரையைச் சொல்லுவார்.

தமிழ்க் கல்வியில் ஆர்வமுடையோருக்கு உண்டி உதவியும், உறுபொருள் கொடுத்துங் கற்பிப்பார். இதற்கு சுவாமி சகஜானந்தர் அவர்களே சான்றாகும்.



'கப்பலோட்டிய தமிழன்' வ. உ. சிதம்பரனாரின் நூற்றாண்டு விழாவையொட்டி, தூத்துக்குடி துறைமுகத்தில் நிறுவப்பட்டுள்ள வ. உ. சி.யின் முழு உருவ வெண்கலச்சிலையை பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 5—9—1972 அன்று திறந்து வைத்தார்கள்.

மக்கள் மூச்சுத் திணறிப் பிணமாகக் கிடப்பார்கள். மோட்டார் வாகனங்களில் பிரேதங்களைத் தூக்கிப் போட்டு மயானத்துக்கு எடுத்துச் செல்லும் சோகக் காட்சியை நானும் பலநாள் பார்த்துக் கண்ணீர்விட்டுக் குமுறியுள்ளேன்! ஆங்கில ஆட்சி, கொடுமை மிகுந்த ஆட்சி! மக்கள் இப்போது போல் எழுச்சி அடையாத காலம். பாவம்! பரிதாபம்!

நாங்கள் கோவையில் வசித்து வந்த சமயம் 1920-21-ஆம் ஆண்டு 'பிளேக்' நோய் நகரெங்கும் பரவி மக்கள் மாண்டு மடிந்தனர். முதல் நாள் மாலையில் எங்கள் வீட்டுச் சொந்தக்காரச் சுப்புராய ஆச்சாரி என் தந்தையுடன் பேசிக் கொண்டிருந்தார். மறுநாள் அதிகாலையில் அவர் 'பிளேக்' நோயால் இறந்து போனார் என்று அறிந்ததும் நாங்கள் பயந்து விட்டோம். எங்கள் வீட்டிலும் எலிகள் விழுந்து செத்தன. திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் உதவியால் நாங்கள் உடனே கோவைக்குச் சமீபமுள்ள திருப்பேரூர் பட்டிலிங்க சுவாமிகள் ஆச்சிரமத்துக்குக் குடிபெயர்ந்தோம். தினம் காலையில் ஒற்றை மாட்டு வண்டியில் கோவைக்குத் தொழிலாளர் வங்கி மற்றும் பண்டகச் சாலை நிருவாகத்தைக் கவனிக்கச் சென்று மாலையில் பேரூருக்குத் திரும்பி விடுவார்கள். நாங்கள் பேரூரில் வசித்து வந்த சமயம் என் கடைசித் தங்கை பேரூரில் பிறந்தாள். அவளுக்கு ஸ்தல அம்பாளான மரகதவல்லியின் பெயரைச் சூட்டினார்.

## வ. உ. சி. கேட்ட கடைசிப் பாடல்கள்!

சிதம்பரனார், தமது ஆவி பிரியும் முன்னர் கவியரசர் பாரதியாரின் தேசியப் பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்டு உள்ளம் பூரித்தார்.

உயிர் விடுந்தறுவாயில், தேவாரத்தையோ, திருவாசகத்தையோ பாடச் சொல்லிக் கேட்பர் சைவர்கள். இந்தக் கொள்கை தூய சைவரான வ. உ. சிக்கும் உடன்பாடே. ஆனால், தெய்வ பக்தியினும் தேசபக்தியே மிகுந்திருந்த காரணத்தால், பாரதியாரின் நாட்டுப் பாடலைப் பாடச்சொல்லி கேட்டுக்கொண்டே உயிர் நீத்தார்.

''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்தது மிந்நாடே'' என்று துவங்கும் பாடலும், ''என்று தணியு மெங்கள் சுதந்தர தாகம்'' என்ற முதலடி கொண்ட பாடலுந்தான் வ. உ. சி. கேட்ட கடைசிப் பாடல்கள்.

''சாவதற்கு முன்னர் சுதந்தரத்தைக் காணக் கொடுத்து வைக்காமற் போனேனே!'' என்று கண்களில் நீர் ததும்பக் கூறிய சொற்களே அவர் வழங்கிய கடைசிச் சொற்கள்.

பிள்ளையவர்கள் இம்மண்ணுலகை விட்டுப் பிரியுந் தறுவாயில்—அதாவது, 1936-ஆம் ஆண்டிலேயே, ''**கூடிய சீக்கிரத்தில் உண்டாகும் உலக யுத்தத்தின் மூலம் இந்திய நாடு சுதந்தரம் எய்துவது திண்ணம்**'' என்று கூறிப் போனார். இவரது ஆழ்ந்த அரசியல் அறிவையும், கனிந்த நாட்டுப் பற்றையும் என்னென்று கூறுவது!




வ. உ. சிதம்பரனாரின் நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப் பெற்ற வ. உ. சி. அஞ்சல் தலைகள் அடங்கிய ஆல்பத்தை நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் திரு. வ.உ.சி. ஆறுமுகம் அவர்களிடம் அளிக்கிறார்.

என தந்தைக்கு தேசபக்தியோடு தெய்வ பக்தியும் நிறைய உண்டு. தினம் காலையில் குளித்தவுடன் தூய உடை அணிந்து நெற்றியில விபூதி பூசிச் சந்தனப் பொட்டு இட்டுக் கடவுளை வணங்கி, எல்லோருடனும் சிரித்து, அன்போடு பேசி உபசரிப்பார்கள். நாங்கள் பேரூரிலிருந்த சமயம் பட்டிலிங்க ஈஸ்வரர் தேவ ஆலயத்தில் ஆண்டு தோறும் நடக்கும் பிரம்மோத்சவத்தில் எட்டாம் திருவிழா மண்டகப்படி அவர்கள் ஆயுள் உள்ளவரை நடத்தி வந்தார்கள். இப்பவும் எங்கள் சொந்த ஊரில் விஸ்வநாத சுவாமி திருக்கோயிலில் ஒன்பதாம் திருவிழா மற்றும் உற்சவம் எங்கள் மூதாதையர் காலமுதல் நாங்கள் நடத்தி வருகிறோம்.

ஆங்கில ஏகாதிபத்தியம் ஒழிய வேண்டும் என்று என் தந்தை கண்ட கனவு நனவாகிவிட்டது. நம்நாடு விடுதலை அடைந்து 25 ஆண்டுகள் பூர்த்தி ஆகிவிட்டது. என் தந்தையின் தேசத் தியாகத்தைப் போற்றி நமது இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் 1972 செப்டம்பர் மாதம் 5-ம் தேதி என் தந்தையின் நூற்றாண்டு விழாவை ஒட்டி தூத்துக்குடி துறைமுகத்தில் வ. உ. சி. யின் முழுஉருவ வெண்கலச் சிலையைப் பல இலட்சம் தமிழ் மக்கள் முன்னிலையில் திறந்து வைத்தார்கள். இந்திய அரசின் தபால் தந்தி அமைச்சர் திரு. பகுகுணா, எந் தந்தையவர்கள் திரு உருவம் பொறித்த தபால் தலையை வெளியிட்டார்கள். மத்திய தொழில் வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் என் தந்தையின் தேசத் தியாகத்தைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

தூத்துக்குடி துறைமுகத்துக்கு 'வ. உ. சி. துறைமுகம்' என்று பெயரிட்டமைக்கும், சென்னை ஜார்ஜ் டவுனை 'வ.உ.சி. நகர்' என்று பெயரிட்டமைக்கும், கோவை காரனேஷன் பார்க்கை, 'சிதம்பரனார் பூங்கா' என்று பெயரிட்டமைக்கும் தமிழகமெங்கும் வ. உ. சி. நூற்றாண்டு விழா ஆங்காங்கு சிறப்பாகக் கொண்டாடிச் சிறப்பித்தமைக்கும், கோவையில் சைவப் பேரவையின் ஆதரவில் வ. உ. சி. மலர் வெளியிட்டு, திரு உருவப் படம் திறந்து வைத்தமைக்கும், வ.உ. சியின் குடும்பத்தின் சார்பில் நான் என் நன்றியறிதலையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்க சிதம்பர நாமம்!

## 'என் பிள்ளையவர்கள் எங்கே?'

வீரச் சிதம்பரனாரை அந்த நாளில் வட நாட்டார் அறிந்து கொண்ட அளவு தமிழ் நாட்டார் தெரிந்து கொள்ளவில்லை எனத் துணிந்து கூறலாம். இதற்குச் சான்றாகச் சில சம்பவங்களை இங்கு எடுத்துக் கூறுவோம்.

சூரத் காங்கிரஸின்போது பிரதிநிதிகள் விடுதியில் மகான் அரவிந்தர், லாலா லஜபதி போன்ற தீவிரவாதத் தலைவர்களும், வேறு பல பிரதிநிதிகளும் உட்கார்ந்திருந்தனர்.

அச்சமயத்தில், அரவிந்தர் அங்கிருந்தவர்களை நோக்கி, ''Where is my Pillai?'' (என் பிள்ளை எங்கே?') என்று கேட்டார். யாவரும் சற்றுத் திகைத்திருந்தனர்.

உடனே அரவிந்தர் விளக்கமாக ''அவர்தான், புகழ்பெற்ற தேசபக்தர் தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளை'' என்றார். எல்லோருக்கும் இவ்வார்த்தைகள் தூக்கி வாரிப் போட்டதைப் போலிருந்தன.

பிள்ளையவர்களும் அங்கு வந்து சேர்ந்தார். அரவிந்தர் அவரை அன்போடு அணைத்துக் கொண்டார்.

# தென்னாட்டுத் திலகர்

—ஏ. ஸி. பால் நாடார்

**1872**-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதியன்று சிதம்பரம் பிள்ளை ஒட்டப்பிடாரத்தில், சைவ வேளாளர் குலத்தில், சிதம்பரக் கவிஞன் குடும்பத்தில் வள்ளி நாயகம் பிள்ளை குமாரர் உலகநாத பிள்ளைக்கும் பரமாயி அம்மாளுக்கும் புதல்வராய் உதித்தார்.

வீராதி வீரன் கட்டபொம்முவுக்கு ஸ்தானாதிபதி பிள்ளையாயிருந்த சுப்பிரமணியப் பிள்ளையும் இவருக்கு நெருங்கிய பந்து. எனவே, வீரமும், கவித்வமும், கலைவாசனையும் இவருக்குப் பிறப்புரிமையாய் அமைந்தன. தம் பிதா மகரிடம் முதற் கல்வி பயின்று, ஒட்டப்பிடாரம் கம்மவார் இந்துப் பள்ளியில் ஆரம்பக் கல்வி கற்று, தூத்துக்குடி புனித சேவியர் உயர்தரப்பள்ளியில் மெட்ரிகுலேஷன் படித்து, 1891-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த பரீட்சையில் தேறினார். பின்னர் திருச்சிராப்பள்ளியில் சட்டக் கல்வி பயின்று, திருநெல்வேலியில் 1895-ஆம் ஆண்டு பிப்ரவரியில் நடந்த பரீட்சையில் தேறி, சென்னை உயர்தர நீதி மன்றத்தில் சன்னது பெற்று, தூத்துக்குடியில் இரண்டாவது கிரேடு பிளீடராக 1895 முதல் வக்கீல் உத்தியோகம் செய்தார். பத்து ஆண்டுகளுக்குள்ளாக அத்தொழிலில் பெரும் புகழ்பெற்று செல்வாக்குள்ளவராய்த் திகழ்ந்தார்.

அந்நாளிலும் ஏழைகள்பால் இரக்கங் காண்பித்தார். அவர்களுக்கு உபகாரமாக வழக்கறிஞர் ஊழியஞ் செய்வதுண்டு. ஒழிந்த நேரங்களிலே 'சைவ நூல் ஆராய்ச்சி செய்தார். திருக்குறளை நன்றாய்க் கற்றுணர்ந்தார். சுவாமி வள்ளிநாயகம் என்னும் அறிஞருடன் சேர்ந்து 'விவேக பானு' எனும் மாதப் பத்திரிகையும் நடத்தி வந்தார்.

அவ்விதம் வாழும் நாளில் இந்தியாவின் அரசியல் நிலையைப் பற்றி மக்களின் மனப்பான்மையில் ஒரு மாறுதல் தோன்றியது. இந்தியரின் மீது அனுதாபங் கொண்ட சில பிரிட்டிஷ் பெருமக்களின் எழுப்புதலின் பேரில், தேசிய உணர்ச்சி மிக்க இந்தியத் தலைவர்கள் 1885-ல் இந்திய நேஷனல் காங்கிரஸை ஸ்தாபித்தார்கள். ஆண்டுகள் தோறும் கூட்டங்கூடி, இந்தியாவின் குறைபாடுகளை முறையிட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றி ராஜப் பிரதிநிதிக்கு மனுச் செய்து கொண்டேயிருந்தார்கள். ஆயினும், அதனால் பொது மக்களிடையே யாதொரு கிளர்ச்சியும் உண்டாகவில்லை. 1900-ம் வருடம் முதல் தன்மூப்புள்ள கர்ஸான் பிரபு ராஜப் பிரதிநிதியாக இருந்தார். கோலாகலத்துடன் கல்கத்தாவிலிருந்து கொண்டு இந்தியாவை அரசு புரிந்து வந்தார். தமது குத்தலான மொழிகளால் தூங்கிக் கொண்டிருந்த இந்தியரை அதட்டி எழுப்பினார். இந்தியரின் தன்மானத்தைப் புண்படுத்தினார். வங்காளிகளை விசேஷமாகப் பழித்தார். தலைமுறை தத்துவமாக இந்தியாவைக் கட்டியாள முறைகள் தேடினார். வங்காளிகள் ஏகோபித்து எதிர்த்தனர். அவர்களை அடக்க, வங்காளத்தை இரண்டு துண்டாக்கினார். வங்கையில் மூண்டது நெருப்பு! இந்தியாவெங்கும் எழுந்தது கிளர்ச்சி! முழங்கினது போர் முரசு! சுதந்திரச் சங்கு எங்கும் தொனித்தது! வங்காளத்தில் இத்தொண்டாற்றினவர்கள் சுரேந்திரநாத் பானர்ஜி, அஸ்விநிகுமார் தத்தர், அரவிந்த கோஷ் முதலியோர். லாலா லஜபத் ராய் பஞ்சாபின் சுதந்திர இயக்கத்திற்குக் காரணர். மஹாராஷ்டிரத்தில் இவ்வியக்கத்தின் தலைவர்கள் திலகரும் கோகலேயும். தமிழ்நாட்டில் அத்தகைய இயக்கத்தை உண்டாக்கினவர் நமது வீரன் வ. உ. சிதம்பரம் பிள்ளை.

பூர்வ கால முதல் தமிழர்கள் வியாபாரத்தில் சிறந்தவர்கள். 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்பது அவர்களின் கோட்பாடு. அக்காலத்தில் வாணிபத்திற்காகப் பல சிறந்த துறைமுகங்கள் இருந்தன. கொற்கை,

வ. உ. சிதம்பரனாரும், அவருடைய முதல் மனைவி வள்ளியம்மையாரும்.





வ. உ. சிதம்பரனாரும் அவருடைய இரண்டாவது மனைவி மீனாட்சி அம்மையாரும்.

பழைய காயல், தொண்டி, காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம் முதலிய துறைகளிலிருந்து கிழக்கே சீனாவுக்கும், மேற்கே ரோம் ராஜ்யத்திற்கும் சரக்குகள் போய் வந்து கொண்டிருந்தன. இவ்வளவு சிறப்பாக விளங்கிய தமிழ்நாட்டின் வியாபாரமும் தொலைந்தது. பொது மக்கள் வறுமை வாய்ப்பட்டனர். வயிறு வளர்ப்பதற்காக, அருகாமையிலுள்ள இலங்கைத் தீவிற்குப் போவதற்குக்கூட அந்நிய நாட்டினரின் கப்பல் உதவியை நாடும்படியான நிர்ப்பந்த நிலைமையும் ஏற்பட்டுவிட்டது. இலங்கைத் தீவோடு சொற்பமாய் நாம் செய்து வந்த வியாபாரமும் அந்நிய நாட்டாரின் தயவில் நடந்தது.

இந்நிலையை உணர்ந்த வ. உ. சி. தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்று நிறுவ முன் வந்தார். தென்னாட்டு வியாபாரிகள் செல்வர்கள், தேச பக்தர்கள் இவர்களின் ஆதரவைப் பெற்று, பங்கு ஒன்றுக்குப் பத்து ரூபாய் வீதம் பத்து லட்ச ரூபாய் மூலதனம் சேர்த்து, சுதேசிக் கப்பல் கம்பெனியை 16-10-1906-ல் [illegible]வு செய்தார். வாலிபர்களுக்கு [illegible]ளிக்கத் தூத்துக்குடியில் 'சு[illegible] பால்யர் சங்கம்' ஏற்படுத்தி நடத்தினார். நெசவுத் தொழிலைப் பரவச் செய்யக் கைத்தறிச் சாலை ஒன்று நிறுவினார். பொது மக்களிடையே தேசிய உணர்ச்சியைத் தூண்டிவிடும்படியாகப் பொதுக்கூட்டங்களில் அடிக்கடி பிரசங்கம் செய்து வந்தார். தூத்துக்குடியில் பருத்தி ஆலையில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் வேற்றுமை ஏற்பட்டபொழுது அவர்களைச் சமரசப்படுத்த முயன்றார். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து கஷ்டப்பட்ட பொழுது, அவர்களுக்கு ஆகாரம் அளிக்க, பொதுஜன ஆதரவைப் பெற்றதோடுகூட சர்க்காரையும் உதவி செய்யும்படியாகச் செய்துவிட்டார். 'சுதேசி' உணர்ச்சி தூத்துக்குடியில் உச்ச நிலையை அடைந்தது. அந்நிய நாட்டுச் சரக்குகளைப் பொதுமக்கள் வெறுத்தனர். 'சுதேசி இயக்கத்திற்கு' விரோதமாயிருந்தவர்களும் பொது மக்கள் வெறுப்பிற்கு இலக்காயினர்.

இவ்விதமாக நாட்டிலெங்கும் சுதேச வாஞ்சையை நாட்டினார். இதற்குப் பல இடையூறுகளும் ஏற்பட்டன. அந்நியக் கப்பல் கம்பெனியின் போட்டி ஒரு புறம்; பொது மக்களின் கட்டுப்பாடில்லாத அளவு கடந்த உற்சாகத்தினால் உண்டான அழிவுகளும் நஷ்டங்களும் இன்னொரு புறம்; சுப்பிரமணிய சிவாவின் அரசியற் கிளர்ச்சி மற்றொரு புறம்; இதற்கு மத்தியில் சர்க்காரின் அடக்குமுறை வேறு. எல்லாஞ் சேர்ந்து சிதம்பரம் பிள்ளைக்கும் சுதேசிக் கப்பலுக்கும் ஆபத்து விளைவித்தன. சுப்பிரமணிய சிவாவின் பேரில் ராஜத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டது. சிதம்பரம் பிள்ளை சிவாவுக்குத் தூண்டுகோலாயிருந்ததாக அவர் பேரிலும் குற்றம் சாட்டி விசாரணை நடந்தது. திருநெல்வேலி அடிஷனல் செஷன்ஸ் ஜட்ஜ் ஆயுள் கால தீவாந்திர தண்டனை விதித்தார். சென்னை ஐக்கோர்ட்டார் ஆறு வருடத் தண்டனையாக மாற்றினர்.

சிறை வாசத்திலும் தமிழ் மொழியை மறக்கவில்லை. திருக்குறளை மிகவும் நன்றாய் ஆராய்ச்சி செய்தார். ஆங்கிலேய ஞானி ஜேம்ஸ் ஆலன் என்பவர் இயற்றிய சில அரிய நூல்களை மொழி பெயர்த்தார். 'மனம் போல வாழ்வு', 'அகமே புறம்' 'வலிமைக்கு மார்க்கம்' என்ற பெயர்களுடன் பிரசுரஞ் செய்தார். சிறையிலிருந்தே பிரசுரமான "மனம் போல வாழ்வு, காகிதம், அச்சு, மை, கட்டடம் அனைத்தும் சுதேசியம்" என்ற குறிப்புடன் வெளியாயிற்று.

சுமார் நாலரை ஆண்டுகளுக்குள் 1912-ஆம் வருடம் டிசம்பர் மாதத்தில் சிதம்பரம்பிள்ளை விடுதலை அடைந்தார். அப்போது வயது நாற்பது. சிறந்த உடற்கட்டு உடையவராயினும் சிறைவாசம் உடல் நலத்தைப் பெரிதும் கெடுத்துவிட்டது. ஆயினும் திடச்சித்தமும், அஞ்சா நெஞ்சமும் முன்போலவே இருந்தன. சுதேசிக் கம்பெனியும் தொலைந்துவிட்டது. வருவாயின்றி வறுமையில் வருந்த நேர்ந்தது. 1922-ஆம் வருடம் மீண்டும் வக்கீலானார். தூத்துக்குடியிலும் சிலகாலம் கோவில்பட்டியிலும் வ்க்கீல் தொழில் புரிந்தார்.

சிதம்பரம் பிள்ளை எந்நிலைமையில் இருந்தாலும் தமிழ்மொழியின் மீதுள்ள பற்றை மறக்கவில்லை. சிறைவாச காலத்தில் 1910-ல் முதன் முதலாகத் தொல்காப்பியத்தைப் படிக்க ஆரம்பித்தார். பொருளதிகாரத்தின் பேரில் பெரிய ஆர்வம் ஏற்பட்டது. தமிழன் ஒவ்வொருவரும் அதைப் படிக்க வேண்டுமென்ற அவாவும் உண்டானது. ஆயினும் அந்நூலுக்கு ஏற்றியுள்ள உரைகள் கடின நடையிலுள்ளன வென்பதை உணர்ந்தார். தமிழ் மக்கள் யாவரும் கற்கும்படி

எளிய நடையில் ஓர் உரை எழுத வேண்டுமென்று கருதி எழுதவும் ஆரம்பித்து விட்டார். விடுதலையான பின் இளம்பூரணரின் உரையொன்று கிடைத்தது. அதன் உயர்வையும் சிறப்பையும் எளிய நடையையும் கண்டு, தாம் உரை எழுதுவது மிகையென்று நினைத்து அதை நிறுத்திக்கொண்டார். அப்பால் இளம்பூரணர் உரையை அச்சிட்டு, வெளிப்படுத்திக் குறைந்த விலைக்கு விற்றார். அதன் கடைசிப் பாகமாகிய மெய்ப் பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் இவற்றை 1936-ஆம் வருடம் பூரணப்படுத்தி வெளியிட்டு, அவ்வருடமே காலஞ்சென்றார்.

ஆயுட்காலம் வரையில் திருக்குறள் ஆராய்ச்சி அவர் மனத்தைக் கவர்ந்து கொண்டேயிருந்தது. 'யான் பெற்ற இன்பம் இவ்வையம் பெறுக' எனும் நோக்கத்துடன் அறத்துப்பால் ஆராய்ச்சியை 1935-ல் வெளியிட்டார். அவற்றில் 30 பாடங்கள் முந்திய உரையாசிரியர் கொண்டுள்ள பாடங்கள். மீதம் 44-ம் வ. உ. சி. யின் தானகக் கொண்டுள்ள பாடங்கள். பரிமேலழகர் பாடங்களிலுள்ள வித்தியாசங்கள் ஏடு பெயர்த்தெழுதுவோரால் ஏற்பட்ட வித்தியாசங்கள் என்று கருதுகிறார். திருக்குறள் பாயிரத்தில் காணப்படும் 'கடவுள் வாழ்த்து, 'வான்சிறப்பு' 'நீத்தார் பெருமை' என்னும் மூன்று அதிகாரங்களும் திருவள்ளுவர் இயற்றவில்லை என்றும் அபிப்பிராயப்படுகிறார்.

1933-ஆம் வ்ருடம் தூத்துக்குடிக் கம்பன் கழகம் நிறுவப்பட்டது. அதன் மூல ஸ்தாபகர்களில் வ. உ. சி. ஒருவர். கழகத்தார் ஒவ்வொரு வாரமும் எனது இல்லமாகிய சௌந்திர விலாஸத்தில் கம்ப ராமாயணத்தை ஆராய்ச்சி செய்து வந்தனர். இக்கழகம் வ. உ. சி. யின் இறுதிக் காலத்தில்தான் ஸ்தாபிக்கப்பட்டதென்றாலும் தீவிர சைவராகிய இவர் இந்நூலைப் பெரிதும் பாராட்டி சுமார் 150 கூட்டங்களில் பிரசன்னமாயிருந்து கழகத்தாருக்கு மிகுந்த உற்சாகம் அளித்து வந்தார். கழகத்தில் ஊக்கமளித்ததோடமையாமல் தமது வீட்டிலும் கம்ப ராமாயணத்தை ஆராய்ச்சி செய்து வந்தார்.

'இன்மை ஒருவற்கு இளிவன்று
சால்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்'

எனும் அருங் குறளுக்கு இலக்காயமைந்தவர்.

**(பம்பாய்த் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட வ. உ. சி. மலரிலிருந்து.)**

## துணைவியைப் பாராட்டிய சிதம்பரனார்!

திருவள்ளுவர், தம் மனைவி இறந்தபோது, 'அடிசிற்கினியாளே'! 'அன்புடையாளே'! என்று மனைவியின் பெருமையைச் செய்யுள் வடிவில் எடுத்துரைத்ததாகச் செவி வழிச் செய்தி ஒன்று நெடுங்காலமாக நிலவி வருகிறது. வள்ளுவரைப் போலவே வ. உ. சிதம்பரனாரும் மனைவியின் மாண்பை உணர்ந்தவர். தமது முதல் மனைவி வள்ளியம்மை மறைந்தபோது, துன்பமுற்று, வருந்தி, அவரது பெருமையைப் பாட்டாக வடித்துள்ளார். அப்பாடல் வருமாறு:


*இல்லமதில் ஒன்றுமே இல்லையென்னாள்; எக்காலும்*
*நல்லுணவு தான்சமைத்து நல்குவாள்—அல்லலற*
*இன்புறவே செய்திடுவாள்; எப்பணியும் உள்ளமுடன்*
*அன்புமிக நல்லாள் அமைந்து.*

*என்னுடைய நண்பர்களும் ஏழையரும் மற்றவரும்*
*என்னுடைய வீடுவந்தால் ஏந்திழைதான்—தன்னுடைய*
*பெற்றோர்வந் தார்களெனப் பேணி உபசரிப்பாள்*
*கற்றோரும் உள்ளுவக்கக் கண்டு.*

## நந்தனார் வகுப்புப் பிள்ளை!

ஆதித் தமிழரொருவரை, தமது இன்னுயிர்த் துணைவராகக் கொண்டு தமிழ் இலக்கியங்களைக் கற்பித்தார் வ.உ.சி. அவர்தான் சுவாமி சகஜானந்தர். பிற்காலத்தில் சிதம்பரனார் சிறையிலிருந்து மீண்டதும் சில காலம் சென்னையில் வசிக்க நேர்ந்தது. அப்போது ஒரு நாள் சென்னை ரிப்பன் அச்சுயந்திரசாலையில் சிதம்பரனாரும் சகஜானந்தரும் முதன் முதலாக ஒருவரை ஒருவர் சந்தித்து உரையாட நேர்ந்த காலையில், பிள்ளை அவரது சாதியைவிசாரித்தாராம். ''நான் நந்தனார்வகுப்புப்பிள்ளை'' யென சகஜானந்தர் பதிலளிக்க, உடனே சிதம்பரனார், சகஜானந்தரின் இரு கைகளையும் இறுகப் பிடித்து, ''உண்மையைக் கூறிய தால் நீர்தான் உண்மை அந்தணர்'' எனக் கூறி, சகஜானந்தரைத் தமதில்லத்திற்குக்கூட்டிச் சென்றார். பின்னர் பல ஆண்டுகள் அவரைத் தம் வீட்டிலேயே வைத்திருந்து உணவளித்துத் தொல்காப்பியம், திருக்குறள் முதலிய சிறந்த நூல்களைப் பயிற்றுவித்துப் பண்டிதராக்கினார்.

சிதம்பரனார் சென்னையை விட்டு நீங்கி, மீண்டும் தமது சொந்த ஊராகிய ஒட்டப்பிடாரம் சென்ற போது சகஜானந்தரையும் தம்முடன் கூட்டிச் சென்றார். தமது உறவினர் இல்லங்களில் நடக்கும்விழாக்களுக்குச் சகஜானந்தரையும் தம்முடன் அழைத்துச் செல்வார். யாராவது சகஜானந்தரின் குலத்தைக் குறித்துக் கேட்டால், ''இவர் ஒரு துறவி; இவரைச் சாதி விசாரிக்கக்கூடாது'' என்பாராம். ''தமது பிள்ளையைப் போன்று என்னை வளர்த்தார். அப்பெருந்தகை வள்ளல்!'' எனச் சகஜானந்தரே கூறுகிறாரெனில், பிள்ளையவர்களின் பெருங்குணத்திற்கு வேறு என்ன சான்று தர வேண்டும்?




ஒவ்வொரு மாட்டிலிருந்தும் வருடத்திற்கு ரூ.500/-க்கு
மேல் அதிகப்படி சம்பாதியுங்கள்...

# பூன்-ஓ-மில்க்®கிற்கு

நாளொன்றுக்கு 20 பைசா செலவிடுங்கள்

**கொழுப்பு மிக்க மிருதியான பாலுக்கும், கூடுதலான லாபத்திற்கும் பூன்-ஓ-மில்க்**

- **பூன்-ஓ-மில்க்கில்,** ஃபேட்டி மாறுபாட்டு விகிதத்தை அதிகமாக்கி, ஹார்மோனற்ற கெலெக்டோகோக்காகச் செயலாற்றி இதன் பயனாக பால் கறவையை 10% அதிகமாக்கும் அயோடினேடெட் கேஸ்ஸீன் அடங்கியுள்ளது.
- **பூன்-ஓ-மில்க்கில்,** விரைவில் ஆவியாகும் ஆஸிட்ஸ்களும்—அஸிடேட்டுகளும், பூட்ரிக் ஆஸிடும் அடங்கியுள்ளன; இவை வெண்ணெய்ச்சத்தை 15% அதிகமாக்குகின்றன என்பது ரேடியோ ஐஸோடோபிக் சோதனைகள் மூலம் நிருபணமாகியுள்ளது.
- **பூன்-ஓ-மில்க்கில்,** மாடுகளை ஆரோக்கியமாக வைத்திருந்து, பால் ஜுரத்தைக் கட்டுப்படுத்தும் கால்ஷியம், ஃபாஸ்ஃபரஸ் மற்றும் வைட்டமின் 'டி'யின் பூஸ்டர் டோஸும் அடங்கியுள்ளன.
- **பூன்-ஓ-மில்க்கில்,** சிறு அளவுகளில் தேவைப் படும், இன்றியமையாத தாதுப் பொருள்கள் எல்லாம் சிறந்த விகிதங்களில் அடங்கியுள்ளன, இவை மாடுகளின் சினைத் திறனை மேம்படுத்துகின்றன.

**பூன்-ஓ-மில்க் மூலம் உங்களுக்கு ஒவ்வொரு மாட்டிலிருந்தும் வருடத்திற்கு ரூ. 500/-க்கு மேல் அதிகப்படி லாபம் கிடைக்கிறது.**

- தினமும் ஒருவேளை தீவனத்துடன் 15 கிராம் பூன்-ஓ-மில்க் கலந்து கொடுங்கள்
- ஒவ்வொரு மாட்டிற்கும் தினமும் 1 கிலோ கிராம் அதிகப்படி தீவனம் கொடுங்கள்



**பூன்-ஓ-மில்க் கெடுதலற்றது பயன்மிக்கது**

கறவைமாடுகளுக்கு **பூன்-ஓ-மில்க்** ஒரு விதமான கெடுதலுமற்றது என்பதைப் பிரபலமான மிருக வைத்தியர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

1 கிலோ மற்றும் 450 கிராம் பாக்கட்டுகளில் கிடைக்கிறது.

**பூன்-ஓ-மில்க் உங்கள் மாடுகளுக்கு ஒரு வரப் பிரசாதம் உங்கள் லாபத்திற்கு ஒரு ஊந்துகோல்**

**பூன்-ஓ-மில்க்—கால் நடைத் தீவனத் துணை உணவு.**
ஆராய்ச்சியின் அடிப்படையில் தயாரிப்பவர்கள்:
ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட்., த.பெ. எண். 9417, பம்பாய் 400 093

*விநியோகஸ்தர்கள்* இந்ப்ரோமாக் கார்ப்பரேஷன், 3, கொல்லன் பட்டறைத் தெரு, கீழவெளிவீதி, மதுரை-1 நடராஜ் ஏஜென்சீஸ், 34, கடைவீதி, கோபிச்செட்டிபாளையம், கோயம்புத்தூர் மாவட்டம். தங்கம்மீயலே ஏஜென்சி, 41-எ, கிரி ரோடு, தி. நகர், சென்னை-17 செந்தூரான் ஏஜென்சீஸ், இந்திரா நகர், 3-வது தெரு, காரைக்குடி-623001

# தேசபக்தர் சிதம்பரனார்!

—எம். பக்தவத்சலம்

இந்த நூற்றாண்டில் இந்தியாவில் முதன் முதலில் சுதேசிக் கப்பல் ஓட்டிய தலைவர் தீர்க்க தரிசி, தளபதி, வழிகாட்டி — வ.உ.சிதம்பரம் பிள்ளை ஒருவர் தான்! சுதேசிக் கப்பல் கம்பெனியால் ஆங்கிலக் கம்பெனிக்கு நஷ்டம் வந்தது. ஆங்கிலேயனது பிழைப்புக்கே, சிரமம் வந்தது! இதைப் பார்த்த அப்போதைய திருநெல்வேலி கலெக்டர் விஞ்ச் துரை இவரை எப்படியாவது வேறு வகையில் பழி வாங்கி அழித்தால்தான், தூத்துக்குடியில் தனது வெள்ளை இனம், சுகமாக வாழமுடியும் என்று நாள் குறித்து விட்டான்.

இதையறிந்த பிள்ளையின் நண்பர்கள் பயந்தார்கள். சுதேசிக் கப்பல் இலாபத்தோடு நடக்க வேண்டுமானால் அவர் சுதந்திர இயக்கத்தில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அவர் குடும்பத்தினரும், உறவினர்களும், உற்ற நண்பர்களும், பெரியவர்களும், வ.உ.சி. சிரமப் படக்கூடாது என்ற அக்கறை கொண்டு, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடவேண்டாம்என்று வேண்டினர். பிள்ளையவர்கள் கேட்கவில்லை. சுதந்திரப் போரின் ஒரு அங்கந்தான் சுதேசிக் கப்பல் கம்பெனி என்று கூறிவிட்டார்.

வெள்ளையன் எதிர்பார்த்திருந்த சோதனை நாள் வந்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் விஞ்ச் துரை தேசியக் கூட்டங்களுக்குத் தடை விதித்திருந்தான். 144-வது செக்ஷன் போட்டான்! அப்போது அந்த மாவட்டத்தில் மற்றொரு பிரபல தேச வீரரான சுப்பிரமணிய சிவா என்பவர்க்கும் தடை விதிக்கப்பட்டது. அவர் கூட்டத்தில் பேசக்கூடாது; அவருக்கு யாரும் ஆதரவு தரக் கூடாது. ஆதரவு தந்தால் அவர்களுக்கும் தண்டனை உண்டு என்றது அடக்குமுறை.

ஆனால் வ.உ.சிதம்பரம் பிள்ளை சுப்பிரமணிய சிவத்தைத் தனது உடன் பிறந்த சகோதரராகவே பாவித்து, மதிப்புடன் நடத்தி ஆதரித்தார். இருவரும் சேர்ந்தே பல கூட்டங்களில் வீர கர்ஜனை செய்து மக்கள் மனத்திலிருந்த பயத்தைப் போக்கிப் புதிய உற்சாகத்தை அளித்தார்கள். அப்போது பாரத மெங்கும் புகழ் பெற்றிருந்த தலைவர் விபின் சந்திர பாலரின், விடுதலை தினத்தை விழாவாகக் கொண்டாடப் பிள்ளையவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

விழாவிற்கு 144 போட்டிருந்தது அரசாங்கம். தெருவில் நாலு பேருக்கு மேல் கூட்டம் கூடிப் பேசக் கூடாது என்பது தடையுத்தரவு. வ.உ. சிதம்பரம் பிள்ளையும், சிவாவும் கூட்டத்தில் பேசினார்கள். வந்தே மாதரம் என்று வானளாவக் கர்ஜித்தனர். பிள்ளையவர்கள் ஆட்சியின் அடக்குமுறையை எதிர்த்துப் பேசினார். அரசாங்கம் அவர் மேல் இராஜத் துவேஷ வழக்கைப் போட்டு செஷன்ஸ் கோர்ட்டில் விசாரித்தது. பின்ஹே என்ற மாவட்ட நீதிபதி சிதம்பரம் பிள்ளையவர்கள் இராஜ நிந்தனையாகப்பேசிய குற்றத்திற்கு இருபதாண்டு, சிவாவுக்கு ஆதரவு தந்தமைக்கு இருபதாண்டு, ஆக நாற்பதாண்டுச் சிறைவாசத்தையும், தடை மீறிப் பிரசங்கம் செய்த சிவாவுக்குப் பத்தாண்டுச் சிறைவாசமும் விதித்துத் தீர்ப்புக் கூறினார். இந்தக் கொடுமையான தீர்ப்பைக் கேட்டு ஊர் நடுங்கியது. திருநெல்வேலிச் சீமையே அதிர்ச்சி கொண்டது. எங்கும் புரட்சிக் கனல் எழுந்தது. மக்கள் பொறுமையிழந்தனர். பிள்ளையவர்கள் மனம் மட்டும் ஆழியினும் அமைதியாக இருந்தது. ஆத்மபலத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவர், மக்களை அமைதியாக இருக்க வேண்டினார். நாற்பது ஆண்டு தண்டனை என்றதைக் கேட்டும் சிரித்துக் கொண்டே இருந்தார்.

அன்று சிதம்பரம் பிள்ளையைத் தண்டித்த அந்தக் கோர்ட்டுத் தீர்ப்பைக் கேட்டு, பாரத மக்களும் பிள்ளையின் உற்றார் உறவினர்களும் கலங்கி வெகுண்டார்கள். இளைஞர்கள் சீறி எழுந்தார்கள். இதெல்லாம் ஒரு பெரிதல்ல. அன்று இந்தியா மந்திரியாயிருந்த லார்டு மார்லி என்பவர், இங்கு வைஸ்ராயாயிருந்த மிண்டோ என்பவருக்கு ஓர் எச்சரிக்கைக் கடிதம் எழுதினாராம். ''இப்படியெல்லாம் இந்திய நாட்டுத் தேச பக்தர்களை அடக்கு முறையில் கொடுமைப் படுத்தினால், இந்தியாவில் ஆங்கில ஆட்சி அதிக நாள் இருக்க முடியாது! அந்த மக்களின் மனம் பயங்கர இயக்கத்தில் ஈடுபட்டு விடும்'' என்று அதில் குறிப்பிட்டிருந்தார். நம் நாட்டுத் தலைவர்களும், பெரியவர்களும் சேலம் சி. விஜயராகவாச்சாரியார் போன்ற சட்ட மேதைகளும் சும்மா கை கட்டிக் கொண்டு இருந்துவிடவில்லை. அரசாங்கத்தோடு விடாமல் வாதாடி, பிரிவி கவுன்சில் வரை போய், நாற்பதாண்டுத் தண்டனையை ஆறு ஆண்டுகளுக்குக் குறைக்கச் செய்தனர். சிதம்பரம் பிள்ளை அவர்களும், சிவம் அவர்களும் ஆறாண்டுத் தண்டனையை, கடினமான சிறை வாசத்தை முடித்து மீண்டும் வெளியே வந்து, தேச பக்தர்களாகவே தொடர்ந்து பணி செய்து தொழிற்சங்க அலுவல்களையும் சிறந்த இலக்கியப் பணிகளையும் புரிந்தனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில், சத்யமூர்த்தி தலைமையில் வ. உ. சி. சிலை ஒன்று நிறுவப்பட்டது. வ.உ.சி. கடைசி வரை மக்கள் விடுதலை பெறுவதற்குரிய வழி வகைகளைச் செய்து கொண்டேயிருந்தார்கள். சிறையிலே அவர்கள் பட்ட சித்திரவதைகளை எல்லாம் விவரித்தால் இது ஒரு சோக காவியமாக முடியும்.

தியாகச் செம்மல் சிதம்பரம் செக்கிழுத்தார்; கல்லுடைத்தார். சிவம் கம்பளிப் புழுக்கள் நிறைந்த கம்பளி வேலை செய்து தீராத வியாதியைப் பெற்றார்.

வ.உ.சி. ஒரு சிறந்த மனிதர். பாரதப் பண்பாட்டில் மாறாத நம்பிக்கையுள்ளவர் 'தேசபக்தர்' —சந்தேகமில்லாத தெய்வ பக்தர். நல்ல தொழிற் சங்கத் தலைவர்—நாணயமுள்ள நிர்வாகி—இரக்க குணமுள்ள நல்லோர். சிறந்த இலக்கிய மேதை—மகாகவி பாரதியாரின் உற்ற நண்பர்—பல நன்னூல்களின் ஆசிரியர்—மனிதாபிமானி—சிறந்த கனவான்—அவரைப் பெற்றதால் தமிழ்நாடு பெருமை கொண்டது. பாரத நாட்டின் தவப் புதல்வர் அவர்.

இத்தகைய மகான்களின் தியாகத்தால் வந்த விடுதலைச் செல்வத்தைப் போற்றிக் காப்பாற்றுவதே நாம் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறாகும். ஆன்றோர்கள் நமக்குத் தேடி வைத்த செல்வம் சுதந்திரம்! அதைப் பழுதில்லாமல் காப்பது நல்ல மனிதர்களின் கடமையாகும். வாழ்க பாரதம்! வாழ்க வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் திருநாமம்!

வந்தே மாதரம்!

**(புக்ஸ் வொர்ல்ட் வெளியீடான 'விடுதலை வீரர் வ.உ.சி.' என்னும் நூலிலிருந்து...)**

# வ. உ. சிதம்பரனாரின் பெருமை

—நாவலர் சோமசுந்தர பாரதியார்

'தென்னாட்டுத் திலகர்' எனப் புகழ்ப் பேர் பூண்ட காலஞ்சென்ற திரு வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்களைப் புதிய இந்தியா முழுவதும் அறியும். குடிமையறமும் உரிமையும் துறந்து, மக்கள் 'அடிமை மோகத்தில்' ஆழ்ந்து மடிந்து இருந்த காலத்தில், தாய்நாடு முற்றுரிமை பெற்றுயர முதலில் முயன்ற பெருந் தலைவருள் ஒருவர் இப்பெரியார். இவர் தமிழகத்தில் தனக்கென வாழாப் பிறர்க்கு உரியாளராய், பொது நலம் பேணப் பிறந்த பெரியார். இளம் பருவ முதல் அஞ்சா நெஞ்சராய் பெருமையும் உரனும் பிறங்க வளர்ந்தவர். ஆங்கிலமறியாமல், ஓங்கு புகழோடு வக்கீல் வேலை பார்த்த உலகநாத பிள்ளையவர்களின் புதல்வர். ஒட்டப்பிடாரம்.தூத்துக்குடி ஊர்களில் குற்ற நீதி மன்றங்களில் திறம்பட வாது புரிந்து, பொருளும் புகழும் செல்வாக்கும் பெருக வாழ்ந்த தமிழ்வாணர்.

காளைப் பருவத்தில் 'தாளாற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்து' வாழ்ந்தார். கூர்த்த மதியும் சீர்ந்த நடுநிலை உணர்வும் வாய்ந்த வழக்கறிஞர். வள்ளுவர் குறளும் கைவல்ய நூலும் பல்காற் பயின்று, சொல் வன்மையும், நல்லியல்பும் நிரம்பி, கற்றோர் களிக்க மற்றோரும் மகிழ்ச் சல்லாபிக்க வல்லவர். நேர்மை நிறைந்த அதிகாரிகளை நட்டு, அறம் திறம்புபவர் அஞ்ச, மறத்தோடெதிர்த்து எளியாரை ஆதரிக்கும் தறுகணாளர். அறிவொடு முரணும் குருட்டுக் கொள்கைகளை அறவாதத் தாலடர்த்து, சமுதாயச் சீர்திருத்தங்களில் முனைந்து நின்றவர். தென்னாட்டுத் தேசத் தொண்டர் முன்னணியில் முதலிடம் கொள்ளும் பெருமை பெற்றவர். ஆசுகவி அரசரான கந்தசாமிக் கவிராயர், மதி நுட்பம் நூலோடு சிறக்க வாழ்ந்த அரசஞ் சண்முகனார் போன்ற புலவருக்கும், நிதிக் கிழவரான செல்வருக்கும் நண்பர். சூரத்துக் காங்கிரசில் திலகரோடு சேர்ந்து தேர்தலுரிமையைப் பேராது காத்த வீரர்.

இந்திய நாட்டில், பெருங்கடலோடும் கப்பல்களை அந்நியர் ஆதிக்கமின்றி நம்மவர் முதலால் ஓட்ட நினைத்து, முதன் முதலில் பொருள் திரட்டி, 'சுதேசி நீராவிக் கப்பல்' கம்பெனி கூட்டிய தனிப் பெருமை இவருடைமை. வாணிப, யாத்திரை மரக்கலக் கம்பெனிகளிலெல்லாம் உலகத்திலேயே பெரிதான பிரிட்டிஷ் இந்தியன் நீராவிக் கப்பல் கம்பெனியாரோடு போட்டி செய்து, தூத்துக்குடிக்குக் கொழும்புக்குமிடையே, ஆங்கிலர் கலங்களில் ஆளும் சரக்கும் ஏறாதபடி வெற்றி கண்டார்.

பிள்ளையவர்களுக்கு [illegible] சிறை விதித்த ஆங்கில நீதிபதியின் கொடுமைக்கும், இழிவுணர்ச்சிக்கும் அக்காலத்திய இந்திய மந்திரியான மார்லிப் பிரபு வெட்கப்பட்டு, உயர்நீதி மன்ற அதிபர் வேலைக்கு உத்தரவு பெற்றிருந்த ஆங்கிலேயரை அவ்வுத்தரவை மாற்றி அவர் ஆயுள் வரை நீதிபதி வேலைக்கே அருகரில்லை என விலக்கின செய்தி உலகறிந்த உண்மை.

இப்பெருங்குணச் செல்வர் சிறையிற்பட்ட அல்லல்களுக்கு எல்லையில்லை. கொசுவலைக் கட்டிலொடு வேண்டுணவு கொண்டு சுக வாழ்வு கொள்ளும் தற்கால மேல் வகுப்புச் சிறைவாசம் அக்காலமறியாதது. கொலை, வழிப்பறிக் குற்றவாளிகளுக்கிடையே அவர்களுக்கொப்ப, கல்லுடைப்பு —செக்காட்டல் —மண் வெட்டு முதலிய கடுமையான வேலைகளைச் செய்து, சவுக்கடிபட்டு, கேப்பைக் கூழ் கறியின்றி சட்டியில் வாங்கியுண்ணும் கொடுங் குற்றவாளிகளின் வாழ்வு, பிள்ளையவர்களின் சிறைவாசம். அது போதாமல்; தண்டனை அவதி கடந்த பின்னும் முன்னைய வக்கீல் தொழில் செய்ய வொட்டாமல் வறுமையுங், கவலையும் வழங்கப்பட்டனர். உடல் நலிவும், உளத் தளர்வும் இடையறாத் துணையாக, எஞ்சிய கால முழுதும் இருந்து இறைவனடி சேர்ந்த வள்ளல் இவர். தமிழர் புத்துணர்வும் நல்வாழ்வும் எய்த வழிவகுத்து வாழ்ந்த இப்பெரியாரை வழுத்தாத நாள் எல்லாம் வீணாளாகும்.

—பம்பாய்த் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட - 'வ. உ. சிதம்பரம் பிள்ளை' என்னும் நூலிலிருந்து.

## வ. உ. சி. அவர்களின் தமிழ்ப்பணி

### எழுதிய நூல்கள் :

1. மெய்யறிவு
2. மெய்யறம்
3. எனது பாடல் திரட்டு
4. வ. உ. சி. கண்ட பாரதி
5. சுயசரிதை.

### மொழிபெயர்ப்பு நூல்கள் :

1. மனம்போல வாழ்வு
2. அகமே புறம்
3. வலிமைக்கு மார்க்கம்
4. சாந்திக்கு மார்க்கம்

### உரை எழுதிய நூல்கள் :

1. இன்னிலை
2. திருக்குறள்
3. சிவஞான போதம்.

### பதிப்பித்த நூல்கள் :

1. தொல்காப்பியம் — எழுத்ததிகாரம் [இளம்பூரணர் உரை]
2. தொல்காப்பியம்— சொல்லதிகாரம் [இளம்பூரணர் உரை]
3. சிவஞான போதம்

### அச்சு வடிவில் வந்த அரசியல் சொற்பொழிவு :

"எனது அரசியல் பெருஞ்செயல்"


### நடத்திய ஏடுகள் :

1. விவேகபாநு
2. தமிழ் நேஷனல் பத்திரிகை
3. இந்துநேசன்.

### அச்சில் வராத நூல்கள் :

1. அழகும் ஆரோக்கியமும்
2. ஆயுளை நீடிக்கும் ஆறு
3. ஊழை வெள்ள உபாயம்
4. சிவ மதம்
5. விஷ்ணு மதம்
6. புத்த மதம்
7. இஸ்லாம் மதம்
8. கிறிஸ்து மதம்
9. மனித மதம்
10. முக்தி நெறி
11. The Universal Scripture
12. திருக்குறள்- மணக்குடவர் உரை [பொருள்]
13. திருக்குறள் - மணக்குடவர் உரை [இன்பம்]
14. திலக மகரிஷி

# நேருவின் உயில்!



**ப**ண்டித நேரு அவர்கள் 1954 ஜூன் 21 அன்று விருப்ப ஆவணம் ஒன்று எழுதி வைத்திருந்தார். அந்த ஆவணத்தைப் பின் மாற்றவோ திருத்தவோ இல்லை. எனவே அது அவர்தம் இறுதி விருப்ப ஆவணமாயிற்று. அதன் ஒரு பகுதி கீழே கொடுக்கப் பெற்றுள்ளது.

''இந்திய மக்களின் பேரன்பையும் பெருமதிப்பையும் நான் பெருமளவில் பெற்றுள்ளேன். அதில்.ஒரு சிறு அளவுகூட நான் அவர்களிடம் திரும்பக் காட்ட முடியாது. மேலும் ஈடிணையற்ற அன்புக்குக் கைம்மாறு செய்வது என்பதும் இயலாத தொன்று.

''இந்திய மக்கள் பலரைப் பாராட்டியிருக்கிறார்கள். சிலரைப் போற்றி வணங்கியிருக்கிறார்கள். ஆனால் இந்தியாவின் பல தரப்பட்ட மக்களும் என்மீது பெருத்த அளவில் அன்பு சொரிந்துள்ளனர். இதைக்கண்டு என் மகிழ்ச்சி பொங்கிப் பெருகியது. என் அவா ஒன்றே ஒன்றுதான். அது என் வாழ்நாளின் எஞ்சிய பகுதியிலும் என் நாட்டினருக்கும் அவர்கள் காட்டும் அன்பிற்கும் நான் தகுதியுடையவனாகத் தொடர்ந்து நடப்பேன் என்பதுதான்.

''என்னுடைய கணக்கற்ற தோழர்களுக்கும் என்னுடன் பணி செய்வோர்க்கும் நான் இன்னும் தனிப்பெருங் கடப்பாடுடையேன்.

''பல பெருமுயற்சிகளிலும் பணிகளிலும் நாங்கள் ஒன்றாகப் பங்கெடுத்துள்ளோம். அதில் கிடைத்த வெற்றிகளையும் வேதனைகளையும் பகிர்ந்துள்ளோம்.

''நான் இறந்தபின் எனக்காகச் சமய அடிப்படையில் இறுதிச் சடங்குகள் எவையும் செய்ய வேண்டாம் என்று மனப்பூர்வமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இவை போன்ற சடங்குகளில் எனக்கு நம்பிக்கை இல்லை. பெயரளவில் அவற்றில் ஈடுபடுவது கூட வெளிவேடமாகவும் நம்மையும் பிறரையும் ஏமாற்றும் முயற்சியாகவும் அமையும்.



### அண்ணலைப் பற்றி நேரு

மகாத்மா காந்தி உண்மையையே உயிராகக் கொண்டிருந்தார். அதனால்தான் நல்ல குறிக்கோளை எய்த வேண்டுமானால் நாம் நல்ல வழிமுறையிலேயே செல்ல வேண்டும். என்பதை இடைவிடாது எடுத்தோதி வந்தார். அவர் உண்மையையே போற்றி வந்ததால் எங்கெங்கு தீமையும் பொய்ம்மையும் காணப் பட்டனவோ அங்கெல்லாம் அவைகளை எதிர்த்தார். இவ்வாறு. ''உள்ளத்தாற் பொய்யாது' ஒழுகி வந்ததால்தான், **அவர் அமர்ந்திருந்த இடங்கள் ஆலயங்கள் ஆயின; அவர் திருவடி தீண்டிய இடங்கள் திருத்தலங்கள் ஆயின.**

*(1-2-1948-இல் நிகழ்த்திய பேச்சில் இருந்து)*

''இறந்தபின் என் உடலை எரியூட்ட வேண்டுமென்பதே என் விருப்பம். அயல் நாட்டில் இறந்துவிட்டால் உடலை அங்கேயே எரித்து விட்டுச் சாம்பலை மட்டும் அலகாபாத் கொண்டு வரவேண்டும். ஒரு பிடி சாம்பல் கங்கையில் தூவப்பட வேண்டும். சாம்பலின் பெரும்பகுதியைக் கீழ்க்கண்டவாறு செய்ய வேண்டும். சாம்பல் சிறிது கூடக் காப்பாற்றி வைக்கப் பெறக் கூடாது.

''அலகாபாத்தில் ஓடும் கங்கையில் ஒரு பிடி சாம்பலைப் போட வேண்டுமென்பதில் சமய நோக்கம் ஒன்றும் கிடையாது. இளமையிலிருந்தே அலகாபாத்தில் ஓடும் கங்கை, யமுனை மீது பற்று மிகவுடையவன் நான். நான் வளர வளர இந்தப் பற்றும் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது.

''பருவங்களின் மாறுதல்களுக்கேற்ப நதிகளின் போக்கும் மாறுபடுவதை நான் கண்டிருக்கிறேன். அப்பொழுது பன்னெடுங் காலமாக அந்த நதியோடு ஒட்டி வளர்ந்து வந்துள்ள வரலாறு, புராணம், மரபு, பாட்டு, கதை ஆகியவற்றை நினைத்துப் பார்ப்பதுண்டு.

''இந்தியாவின் வற்றாத நதியான கங்கை மக்களால் பெரிதும் விரும்பப்படுகிறது. அதைச் சுற்றியே பல இனமக்களின் நினைவுகளும், அவர்களுடைய ஆர்வங்களும், அச்சங்களும், அவர்களுடைய வெற்றிப் பாடல்களும் அவர்களுடைய வெற்றி தோல்விகளும் பின்னிப் பின்னிக் கிடக்கின்றன.

''இந்தியாவின் நெடுங்காலப் பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் அது ஒரு சின்னமாக விளங்குகிறது. அந்நதி ஓடிக் கொண்டேயிருந்தாலும், மாறிக் கொண்டேயிருந்தாலும் அது என்றும் மாறாத நதியாகவே உள்ளது. அது என்னை என்றென்றும் கவரும். இமயத்தின் பனிபடிந்த சிகரங்களையும் ஆழ்ந்தகன்ற பள்ளத்தாக்குகளையும் என் வாழ்வும் பணியும் உருவாவதற்கிடமாக அமைந்த வளமிக்க சமவெளிகளையும் அது நினைவூட்டுகிறது.

''கங்கை காலை இளவெயிலில் ஒளி வீசிக் களிநடமிடுகின்றாள். மாலை நிழலிலே கறுத்து இருண்டு மறை பொருளாய் இருள் பரவும் பொழுது இனம் புரியாத அச்சத்தை ஊட்டுபவளாய் மாறுகிறாள். குளிர் காலத்தில் குறுகி மென்னடையிட்டு ஒயிலாக ஓடுகிறாள். இந்தியாவின் கடந்தகால நினைவில் தோன்றி, நிகழ்கால நனவாக ஓடி, எதிர்காலக் கனவுக் கடலில் கலக்கச் செல்லும் கன்னியாகக் கங்கை காட்சியளிக்கிறாள்.

''கடந்த காலத்தின் மரபுகளையும் பழக்க வழக்கங்களையும் நான் கைவிட்டுவிட விரும்புகிறேன். இந்தியாவும் தன்னைப் பிணைத்துள்ள தளைகள் அனைத்தையும் உடைத்தெறிந்து விடுதலையடைய வேண்டுமென்று விரும்புகிறேன். மக்களுக்குள் பல பிரிவை உண்டு பண்ணி அவர்களில் பெரும்பாலோரைத் தாழ்த்தி, உடலும் மனமும் தன்னிச்சைபோல் வளரவிடாது தடுக்கும் நிலை மாறவேண்டுமென நான் விரும்புகிறேன். ஆயினும் கடந்த காலத்திலிருந்து என்னை முழுதும் துண்டித்துக் கொள்ளவிரும்பவில்லை.

''மாபெரும் மரபின் வழியில் ஒருவனாகத் தோன்றியதற்கு நான் பெருமைப்படுகிறேன். வரலாற்றின் தொடக்கக் காலத்திலிருந்து தொடர்ந்து வரும் சங்கிலிப் பிணைப்பில் ஓர் இணைப்பாக நானும் மற்ற எல்லோரையும் போல இருப்பதை எண்ணிப் பெருமைப்படுகிறேன். எனக்கு இந்தப் பிணைப்பை உடைக்க விரும்பவில்லை.

''ஏனெனில் நான் அதைப் போற்றிக் காத்து அதிலிருந்து ஊக்கம் பெறவும் விரும்புகிறேன். என்னுடைய இந்த அவாவை வெளிப்படுத்தவும் இந்தியப் பண்பாட்டின் பெருமைக்கு நான் செய்யும் இறுதி வணக்கமாகவுமே என்னுடைய சாம்பலில் ஒரு பிடியை அலகாபாத்தில் ஓடும் கங்கை நீரில் போட வேண்டும் என்று என்வேண்டுகோளை எழுப்புகிறேன். இந்தியாவை அலைகளால் அரவணைத்துக் கிடக்கும் பெருங்கடலுக்கு அச் சாம்பலைக் கங்கையாறு சுமந்து செல்லுமாக.

மீதியுள்ள சாம்பலை வான்மீது ஊர்தியில் கொண்டு சென்று இந்தியாவின் உழவர்கள் பாடுபடும் வயல்கள் மீது தூவி, அச்சாம்பல் நாட்டின் மண்ணோடு மண்ணாகக் கலந்து மக்கிப் போய் இந்திய மண்ணிலிருந்து பிரிக்க முடியாதவாறு இரண்டறக் கலக்கவேண்டும் என்பதே என் அவா.''

**(குறிப்பு : உயிலின் பிறபகுதிகள் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படவில்லை.)**

**ஆதாரம் : சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ள உலகப்பேரொளி.**



அதிகமாக யாருக்கும் அறிவுரை கூறவேண்டாம். உங்கள் கடமையை நீங்கள் செய்யுங்கள். அது ஒன்று தான் நீங்கள் பிறருக்கு அளிக்கக்கூடிய அறிவுரை. நீங்கள் செய்யுங்கள்; பிறர் அதைப் பின்பற்றுவார்கள்.

—நேரு

